# ஸ்ரீ ஸாயி சரித்திரம்




ஸ்ரீ நரஸிம்ம ஸ்வாமிஜியின் 83-வது

பிறந்ததின விழா (12-9-1956) அன்று

பிரதம சிஷ்ய கோஷ்டியாரால்

வெளியிடப்பட்டது.

T
8462

# ஸ்ரீ ஸாயி சரித்திரம்

—:*:—

## அத்தியாயம் 1

### எங்கள் குருநாதன்

உலகத்தில் மானிடராய் பிறந்தவர்கள் தம் தம் கடமைகளைச் செய்ய வேண்டியது மிகவும் அவசியம். இந்த நோக்கத்துடன் நாங்கள் பிரதம சிஷ்ய கோஷ்டியராய் செய்யவேண்டிய கடமை எங்கள் குருநாதன் மகிமையை எடுத்துறைப்பதாகும்.

எங்கள் குருநாதன் சேலம் ஜில்லாவில் உத்தம குலத்தில் பிறந்தவர். பெரிய தனவந்தர். அவர் குலதெய்வம் திருப்பதி வெங்கடாஜலபதி பெருமாள். இதை யொட்டியே அவர் பெயரும் அவர் முன்னேர்களின் பெயர்களும் அமைக்கப்பட்டுள்ளன. ஆண்டவன் ஸ்ரீ வெங்கடாஜலபதியைக் குல தெய்வமாகக் கொண்டதின் பலனுலும் அருளினுலும் அவர் மிகவும் தீவிர வெங்கடாஜலபதி பக்தராய் விளங்குகிறுர்.

சிறு வயதிலிருந்தே இவர் நம் நாட்டு சாஸ்திரங்களிலும் மேல் நாட்டு படிப்பிலும் மிகவும் ஊக்கம் செலுத்தி பயின்று வந்தார். இவர் சட்டக் கல்லூரியில் படிக்கும் காலத்தில் "சுரைக்காய் ஸ்வாமி" என்ற மகானிடம் சீடராக இருந்தார். இக்குருவின் மேன்மையான அன்பிற்கு பாத்திரமானுர். கல்வியில் சிறந்து விளங்கினுர்.

பட்டம் பெற்ற பிறகு சேலத்திலேயே வக்கீலாக தொழில் செய்ய ஆரம்பித்தார். இத்துறையில் தன்னை நாடி வந்தவர்களுக்கு யாதொரு மனக்கவலைக்கும் இடமில்லாமல் தன் தொழிலில் மேன்மையடைந்து வந்தார். அவர் பெயரும் கீர்த்தியும் தென்னு டெங்கும் பரவலாயிற்று.

ஆதியிலிருந்தே இவரின் நோக்கம் மிகவும் உன்னதமானது. ஜனங்கள் எல்லோரும் நன்மை அடையவேண்டும், சௌக்கிய மாயிருக்க வேண்டும் என்றே தொண்டு செய்து வந்தார். முனிசிபல் சேர்மனாக இருந்து மக்களுக்கு பல நன்மைகள் புரிந்தார். அங்கே ஒரு பஜனை மடம் கட்டி தினந்தோறும் தானும் தன் சகா வக்கீல் களும் சேர்ந்து பக்தி மார்க்கத்தில் ஈடுபட்டு ஆனந்தமும் பக்தி பெருக்கும் அடைந்தார். இவர் பெயரைக் கேட்டால் அழுத பிள்ளை யும் வாய்மூடும்.

இன்னும் "தியசாபிகல்" சங்கத்திலும் மெம்பராக இருந்து பலவித நன்மைகள் புரிந்தார். சட்ட சபையில் மெம்பராக இருந்து இந்தியருடைய நன்மைக்காக மிகவும் பாடுபட்டு வந்தார். இந்தியா விற்கு சுய ராஜ்யம்பெற ஏற்பத்தப்பட்ட கட்சியில் முக்கிய ஸ்தானம் வகித்தார்.

இந்தியாவிற்கு சுய ராஜ்யம் பெற மேல் பேச்சுகள் நடத்த இங்கிலாந்து சென்றுர். போகும் வழியில் ஜிப்ரால்டரில் (Gibraltar) ஆங்கிலேயர் செய்த சூழ்ச்சியினுல் இவர் 15 நாள் சிறை வாசம் அனுபவிக்க லாயிற்று. அதிலிருந்து தப்புவிக்க இவர் தம் குருவாகிய "சுரைக்காய்" ஸ்வாமியைத் தியானித்தார். அவர் அரு ளால் உடனே விடுதலையாகி திரும்ப இந்தியா வந்து சேர்ந்தார்.

வாழ் நாட்களில் எல்லோருக்கும் நேரிடும் சில கஷ்டங்கள் இவருக்கும் நேர்ந்தன. இவர் முதல் புதல்வன் சிறுவயதிலேயே இறந்து விட்டான். மற்றும் இரு குழந்தைகள் தவறி கிணற்றில் விழுந்து இளம் பிராயத்திலேயே உயிர் நீற்றனர். இச்சம்பவங்கள்

எந்த மஹானாலும் சகிக்க முடியாதவை. மனம் உடைந்து தெய்வ அவநம்பிக்கை தான் உண்டாகும். ஆனால் எங்கள் குருநாதன் சாஸ்திரங்கள் பொய்யா? சத்தியம் பொய்யா? ஈஸ்வரன் பொய்யா என்ற உண்மையை ஆலோசிக்க ஆரம்பித்தார். இந்த விசாரணை செய்ய தக்க வசதிகள் ஏற்பாடு செய்து கொள்ள முயன்றார். பகவத்பாதாள் சங்கராச்சாரியார் அனுமதிப்படி வானப்பிரஸ்தாஸ்ரமம் புக ஏற்பாடு செய்து கொண்டு வெளியேறினார்.

தன் சுற்றுப் பிரயாணத்தில் அரவிந்தாஸ்ரமம், ரமணாஸ்ரமம், இமயமலை முதலிய இடங்களுக்கு சென்று மகான்களை தரிசனம் செய்தார். பிறகு ரமணாஸ்ரமம் திரும்ப வந்து சேர்ந்தார். இவ்விடம் தங்கும் காலத்தில் ஞானம் பெற்று ஸ்ரீ ரமணரைப் பற்றி முதன் முதலாக புத்தகம் எழுதி அவர் மகிமையை உலகெங்கும் பரவச் செய்தார். ஒரு தடவை நாரயண மகராஜ் என்ற மகானை சந்தித்தபோது தனக்கு வியாபாரத்திற்கு ஒரு நல்ல வைடூர்யம் தேவை என்று சொன்னார். அவர் அதற்கு அது சீரடியில் கிடைக்கும் என்றுசொன்னதின் பேரில் எம் குருநாதன் சீரடியில் வந்து சேர்ந்தார். சீரடி என்பது பம்பாய் மாகாணத்தில் ஆமத்நகர் ஜில்லாவில் கோபர்கான் தாலுக்காவில் உள்ள சிறிய கிராமம். சீரடி ஸாயி பாபாவின் பிரதம சீடராகிய ஸ்ரீ உபாஸினி மகராஜ் என்பவர் சகோரி என்னும் இடத்தில் இருந்து வந்தார். எங்கள் குருநாதர் அவரை தரிசனம் செய்து ஸ்ரீஸாயி பாபாவின் மகிமையை அறிந்தார். பிறகு உபாஸினி மகராஜின் சரித்திரத்தை எழுதி அவருடைய மகிமையையும் பரவச் செய்தார்.

சீரடி வந்து சேர்ந்து அங்கு ஸ்ரீ ஸாயி பாபாவின் சமாதியின் அருகில் உட்கார்ந்து தியானம் செய்து வந்தார். சில நாட்களில் தாம் கோரிய ஞானம், பக்தி, ஆனந்தம் முதலியவைகளை வெகு சுலபமாக அடைந்தார். பாபாவின் பரிபூர்ண கிருபை இவருக்கு கிடைத்தது.

பின் வரும் சம்பவங்களினுல் பாபா தன் பக்தியை பரவச செய்ய ஏற்படுத்திய பிரதம சிஷ்யர் இவரே என்பது தெரியவரும்.

சீரடியில் தங்கியிருக்கும் போதும், பிறகு பூனு முதலிய வெளியூர்களுக்குச் சென்றும் ஸாயிபாபா ஜீவித்திருந்த காலத்தில் உடனிருந்த பக்தர்களை (மனிதர்களைச்) சந்தித்து, பாபாவின் திவ்ய குணுதிசயங்களைப் பற்றியும், பாபாவால் அவர்கள் அடைந்த அனுபவங்களைப் பற்றியும் விசாரித் தறிந்து கொண்டார். அவர்கள் பெரும்பாலும் பேரும், பட்டமும் பெற்ற தனவந்தர்கள்.

பிறகு பாபாவின் புகழை பரவச்செய்யும் நோக்கத்துடன் தான் தெரிந்துகொண்ட விஷயங்களை புத்தக ரூபமாகவும், பத்திரிகைகள் மூலமாகவும் விளம்பரப் படுத்தினுர். இவர் சில வருஷங்கள் ரமணுச்ரமத்தில் மௌனவிருதம் மேற்கொண்டார்.

1940ம் ஆண்டு ரமணுச்ரமத்திலிருந்து கிளம்பி ஸ்ரீ ஸாயி பாபாவின் தீவிர பிரசாரத்தில் இறங்கினுர். அவர் பல வீடுகளுக்கும், பொதுஸ்தலங்களுக்கும் சென்று கூட்டம்கூட்டி பாபாவின் மஹிமைகளையும் ஈசுவர குணங்களைப் பற்றியும் போதித்து வந்தார். இதனுல் பல ஜனங்கள் நன்மை அடைந்தனர். இதிலிருந்தே ஸ்ரீ பாபா, இவரை, எங்கள் குருநாதனை தன்னுருவாக்கி தன் பக்தியை பரவச்செய்ய ஏற்படுத்தினுர் என்று தெரிய வருகிறது.

இதற்கு மற்றுமோர் உதாரணம்: 1913-14ம் ஆண்டில் ஸ்ரீ பாபா ஒரு பக்தனுக்கு நம் குருநாதரின் உருவாக காட்சியளித்தார் என்று (அந்த பக்தரின்) வாக்கு மூலத்தின்படி தெரியவருகிறது. இதிலிருந்தும் பாபா நம் குருநாதரை ஏற்கனவே தன் பிரசாரத்திற்காக ஏற்படுத்தி யுள்ளார் என்று நன்கு விளங்குகிறது.

இப்பேர்பட்ட எங்கள் குருநாதன் பாபாவின் உருவாய் சர்வ சாதாரணமாக ஜனங்களுடன் பழகி அவர்களுக்கு வேண்டிய

அனுகூலங்கள் இம்மைக்கும் மறுமைக்கும் புரிந்து வருகிறார். இவருடைய பிரயாசையினால் மயிலாப்பூரில் ஒரு பெரிய ஆலயமும் அமைக்கப் பட்டுள்ளது.

---

# அத்தியாயம் 2

எங்கள் குருநாதன் முக்கியமாக எங்களுக்குப் போதித்தது "தம் தம் கடமையை செவ்வனே செய்வது" என்பதுதான். அதன் பிரகாரம் குருநாதனுடன் நாங்கள் நெருங்கி வசித்து வருங்காலத்தில் நடந்த முக்கியமான சில சம்பவங்களை யாருக்கும் தெரியும்படி சொல்லுவதே எங்கள் கடமை.

எங்கள் குருநாதன் பாபாவிடமிருந்து பூர்ண அன்பையும் சக்தியையும் பெற்றபின்பு (தெய்வ) பக்தியினால் ஏற்படும் நற்பலன்களையும் அனுகூலங்களையும் உலகத்திலுள்ள எல்லா ஜனங்களும் தெரிந்து கொள்ளும்படி பத்திரிகைகள் மூலமாகவும் உபன்யாசங்கள் மூலமாகவும பரவச் செய்தார்.

இன்னும் தீவிரமாக பாபாவின் பக்தியை ஜனங்களுக்கு ஊட்ட விரும்பி 1940ம் வருடம் முதல் பாபாவின் படத்தை கையில் வைத்துக் கொண்டு பல வீடுகள் தோறும், பொதுஸ்தலங்கள் தோறும் சென்று பாபாவின் பாதாபிஷேகம், பூஜை, பஜனை, உபந்யாசம் முதலியவைகளை நடத்தி வைத்து பாபா பக்தியை பரவச்செய்தார்,

சுமார் இரண்டு வருடகாலம் இடைவிடாமல் தினந்தோறும் சென்னைமா நகரிலும், அதைச் சுற்றியுள்ள பேட்டைகளிலும் இவ்வாறு நடத்தி வந்தது யாவருக்கும் தெரிந்ததே. அச்சமயத்தில்

தான் எங்களுக்கு அவருடன் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டு அவரின் அரியகுணங்களும் மேன்மையான ஹ்ருதயமும் தெரிய வந்தது. நாங்களும் மேற் சொன்ன பூஜைகளிலும் பஜனை களிலும் அவருடன் கலந்து கொண்டோம் என்று சொல்வதற்கு எங்களுக்கு மிகப் பெருமையாக இருக்கின்றது.

இம்மாதிரி சிலமாதங்கள் கழிந்தபின்பு இந்த நகரில் பாபா பக்தியை பரவச்செய்யும் தொண்டை தன் பக்த கோஷ்டியை செய்யு மாறு விட்டு விட்டு இந்தியாவின் வேறு பல பாகங்களில் பரவச் செய்யும் நோக்கத்துடன் சுற்றுப்பிரயாணம் ஆரம்பித்தார். இவ் வாறு வட இந்தியாவில் செல்லும் பொழுது பாபாவின் பூஜையை தன்னால் இயற்றப்பட்ட பூஜா விதி மூல மாகவும் காண் பித்தும் கொடுத்தார்,

இவ்வாறு செல்லும் பொழுது இந்தூரில் நீதிபதியாய் இருந்த M. B. ரேகே என்னும் ஓர் சிறந்த பாபா பக்தரை காண நேர்ந்தது. நம் குருநாதன் அவருடன் ஸம்பாஷித்துக் கொண் டிருக்கையில் ரேகே சொன்னார்: "பாபாவின் பக்தியைப் பரவ செய்ய உம்மையே அவர் நியமித்திருக்கிறார் என்பது என் பூர்ண நம்பிக்கை. அதற்கு வேண்டிய உடல் வலிவையும், பண உதவி யையும் அளிப்பார். ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸாவிற்கு விவேகாநந்தர் எப்படி சேவை செய்தாரோ அது போல் நீங்களும், பாபா விற்கு சேவை செய்வீர்" என்றார்.

அதன் பிறகு அங்கிருந்து நேராக சீரடிவந்து சேர்ந்தார் அப்போது தென்னிந்தியர் ஒருவர் அவரிடம் வந்து "தங்கள் பெயர் என்ன ?" என்று கேட்டார். குருநாதன் அதற்கு பதில் சொல்லவும், அவரை நமஸ்கரித்து அவரிடம் ஒரு முடிப்பையும் கொடுத்து இதை பாபாவிடம் கொடுங்கள் என்று சொல்லி விட்டு சென்று விட்டார். எங்கள் குருநாதன் முடிப்பை அவிழ்த்துப் பார்க்க அதில் பதினோன்றாயிர ரூபாய் நோட்டுகளும், நான்கு

நூறு ரூபாய் நோட்டுகளும், ஐந்து பத்து ரூபாய் நோட்டுகளும் ஒரு ஐந்து ரூபாய்நோட்டும் ஆகமொத்தம் பதினோராயிரத்து நானூற்று ஐம்பத்தைந்து ரூபாய் இருக்க கண்டார். ஆச்சரியம் அடைந்தார். சிறிது திகைப்பும் உண்டாயிற்று. மனதைத் தேற்றிக்கொண்டு பாபா சமாதியின் அருகே உட்காரந்து தியானம் செய்து பாபா உத்தரவு இந்தப் பணத்தை தக்க ட்ரஸ்டியிடம் ஒப்பிவித்து பாபாவின் பிரசாரத்திற்கு உபயோகப்படுத்த வேண்டும் என்பதை ஒரு சீட்டு மூலம் தெரிந்து கொண்டார். இதற்கு மேல் வேண்டிய அருளையும், பாபாவிட ம் பெற்றார்.

பாபாவின் உத்தரவைப் பெற்ற பின்பு சீரடி ஸாயி ஸமஸ்தானத்தை இப்பணத்திற்கு ட்ரஸடியாக இருந்து தன்னுடைய பிரசாரத்திற்கு அவ்வப்பொழுது கொடுக்கும்படி கேட்டுகொண்டார். ஆனால் அவர்கள் அதற்கு இணங்காததால், பணத்தை எடுத்துக் கொண்டு சென்னைக்குத் திரும்பினர்.

சென்னை அடைந்தபின் ஸாயிஸமாஜம் எற்படுத்துவதிலும், அதற்கு தகுந்த ட்ரஸ்டிகள் நியமிப்பதும், தீவிரமாக ஆரம்பித்தார். 1941ம் வருடம் எங்கள் குருநாதன் ஊக்கத்தினல், அகில இந்திய ஸாயி ஸமாஜம் ஏற்படுத்தப் பட்டது. பாபாவின் பக்தி தென்னிந்தியா முழுவதும், இன்னும் பல வெளி நாடுகளிலும் பரவலாயிற்று. ஸாயி சுதா என்னும் ஒரு மாதாந்திர பத்திரிகையும் வெளியிடப் பட்டது.

எங்கள் குருநாதன் இவ்வாறு சுலபமாக செய்யக் கூடிய பக்தி மார்க்கத்தை போதிக்கவும் அதைப் பின்பற்றி அதனல் ஆயிரக்கணக்கானவர்கள் சௌகரியம் அடைந்தார்கள். பலர் கோரிய பலன்களைப் பெற்றார்கள். இதற்கு உதாரணமாக இந்தியாவின் பலபாகங்களில் ஏற்பட்டிருக்கும் ஸாயி பாபாவின் கோயில்களைக் கூறலாம். இன்னும் பல வீடுகளில் பாபாவின் படம் வைத்து பிரதி தினமும் அல்லது வியாழக்கிழமை தோறும் பூஜை, பாதாபிஷேகம் பஜனை முதலியவை நடந்து வருவதையும் கூறலாம்.

இது மாத்திரமன்று எங்கள் குருநாதன் தென்னிந்தியா விலிருப்பவர்களுக்கும், மற்றபல பாகங்களில் இருப்பவர்களுக்கும் அனுகூலமாக தெரியபடுத்தவும், தனது விடாமுயற்சியினால் லட்சக்கணக்கான பக்தர்களின் ஆதாரவைக் கொண்டு ஒருமாபெரும், ஸாயிபாபா கோயிலை சென்னையில் மைலாப்பூரில் நிர்மாணித்திருக் கிறார். அதன் கும்பாபிஷேகம் சமீபத்தில் நடந்தது எல்லோருக்கும் தெரிந்திருக்கும். இக்கோயிலுக்கு அருகிலேயே அகில இந்திய ஸாயி ஸமாஜ காரியாலயமும், புத்தகசாலையும், தர்மவைத்ய சாலையும் எங்கள் குருநாதன் ஆசிரமும் அமைக்கப்பட்டுள்ளன. எங்கள் குருநாதன் சமாஜத்திற்கு வரும் பக்தர்களுக்கு வேண்டியவைகளை செய்து கொடுத்தும், பஜனையின் முக்கியத்வத்தை எடுத்துரைத்தும், திரைப் படம் மூலம் பாபாவின் சரித்திரத்தை உபந்நியசித்தும், பாபாவின் பூர்ண பிரசாதத்தை மக்களுக்கு அளித்து வருகிறார். இதை எல்லோரும் நன்கு உணர்ந்து தருணத்தை நழுவ விடாமல் ஸாயிபாபாவிடம் தீவிரமாக பக்தியில் ஈடுபட்டு சகல விதமான நன்மைகளையும் (இம்மைக்கும் சரி, மறுமைக்கும் சரி) அடையும் படி எல்லோரையும் வேண்டிக் கொள்வது எங்கள் கடமை.

எங்கள் குருநாதன் தனக்கு கிடைத்த ஆனந்தத்தை மகா ஜனங்களுக்கு பங்கிட்டுக் கொடுக்குமாறு தனது சுயநலங்களை கருதாது எல்லோருக்கும் இந்த பக்தியை பரவச் செய்வதே எங்கள் குருநாதன் கடமை.

—

# அத்தியாயம் 3

ராகம்:– நாட்டை தாளம்:–ஆதி

ஸர்வம் ப்ரம்மமெனும் ஸாயிநாதனே
சரண் புகுந்தேன் யான் ஸத்கதியடைய
ஸ்கந்தனுக் கண்ணனே சக்தி கணேசனே
ஸமயமிங்குதித்து எனக்கருள் புரிவாயே.

குருத்யானம்

ப்ரும்மானந்தம் பரமஸுகதம் கேவலம் ஞானமூர்த்திம்
த்வந்த்வா தீதம் ககன ஸத்ருசம் தத்வமஸ்யாதி லக்ஷ்யம்
ஏகம் நித்யம் விமல மசலம் ஸர்வதீஸாக்ஷீ பூதம்
ஸாயி நாதம்த்ரிகுண ரஹிதம் ஸத்குரும்தம் நமாமி.

"ஸாயிபாபா" என்பவர் இந்த கலியுகத்தில் வந்துதித்த கண் கண்ட தெய்வம். இவரை எல்லா மதத்தினர்களும் தங்கள் தெய்வமாகவே பாவித்து வழி படுகின்றனர். இவர் புராதன காலத்திய கதைப் புருடனல்ல. இவர்.

குறம் மெட்டு

சீரடியில் வந்துதித்த சின்மயஸ்வரூபன்
ஸ்ரீ ஸாயி தேவனென்றும். திவ்ய நாமரூபன்
மானிடரை உய்விக்கவே மகனீயன் வந்தான்
நானிருக்க பயமேன் எனும் தேன் மொழியும் தந்தான்

சீரடியில் சுமார் 1886ம் வருடத்திற்கு முன்பே 16 வயதுள்ள பக்கிரியாய் வந்து, 1918ம் வருடம் அக்டோபர் மாதம் 18ம் தேதி

வரையில் ஸஹஜமாய் ஒன்றிலும் பற்றில்லாமல் நடமாடிக் கொண்டிருந்தார். இவரிடத்தில் பரிசுத்தம். அபூர்வசக்தி, ஸத்யம் அன்பு முதலான தெய்வீகக் குணங்கள் குடியிருந்தன. இவர் தன்னுடைய தெய்வீகமான அபூர்வ சக்தியை தன்னை வந்தடையும் பக்தர்களுடைய நலன்களுக்கே உபயோகித்து வந்தார். இவர் ஸ்தூல சரீரத்துடன் இருந்த காலத்திலும் அதற்குப்பின்னும் (நாளது வரையில்) கடவுளது லீலைகளில் கலந்து கொண்டு தன்னை வழிபடுபவர்களை தெய்வ வசப்படுத்தி நன்மையே செய்து வந்தார். இன்னமும் செய்து வருகிறார். இவர் பிரும்ம சூத்திரத்தில் சொல்லியபடி (4ம் அத்தியாயம்) ஒரு "அபாந்தராத்மா". இவரது அன்பு உன்னதமான தாயின் அன்பிற்கும் மேலானது. இவர் எல்லா ஜீவராசிகளிலும் தான் (ஒன்றுகிய தெய்வம்) இருப்பதை வசனத்திலும், ப்ரத்தியக்ஷமான செய்கைகளிலும் நிரூபித்தார். எல்லோரும் ஒன்றுபட்டு வாழ வேண்டுமென்ற தத்வத்தையும் 'எல்லோரையும் அன்புடன் நடத்த வேண்டுமென்ற தத்வத்தையும், எல்லோரையும் அன்புடன் நடத்த வேண்டுமென்ற நீதி மொழிகளையும் புகட்டினர். இவரிடத்தில், இவ்விதமான தெய்வீகத்தன்மை, சக்தி முதலானவைகள் பொருந்தியிருந்ததாலும், இவர் தன்சக்தியை லோகத்தின் நன்மைக்கே உபயோகப்படுத்தினர். ஆதவால் இவர் பகவத் கீதையில் "கிருஷ்ண பகவான்" அருளியபடி,

> பரித்ராணய ஸாதூனும் விநாசாய சதுஷ்க்ருதாம்
>
> தர்ம ஸம்ஸ்தாப னார்த்தாய ஸம்பவாமி யுகே யுகே என்றபடி

இக்கலியுகத்தில் அவதாரம் செய்து ஸாதுக்களை பரிபாலித்தும், துஷ்டர்களை தண்டித்தும், தருமத்தை நிலை நாட்டியதால் இவரை ஓர் அவதாரபுருஷன் எனக்கொண்டாட மறுப்பும், வெறுப்பும் இல்லை. ஆதலால் தான் எல்லா மதத்தினரும் தங்கள் தெய்வமாகக் கொண்டாடுகிறார்கள்.

இவர் முக்கியமாக இந்தியாவிற்கு தற்போது மிகவும் தேவையான ஒற்றுமையும், பரஸ்பர நல்லெண்ணத்தையும் அடிகோரியவர். இந்தியாவில் ஸர்வ மதத்தினர்களும் ஒன்றுபட்டு வாழ்ந்தால் தான் சுகமாக இருக்கலாம் என்பதை விளக்கி காட்டினார்; காட்டுகிறார். இப்போது நமக்குக் கிடைத்திருக்கும் ஸ்வராஜ்யம் ஸ்திரமாகவும், நிரந்தரமாகவும் இருப்பதற்கு இந்த ஒற்றுமை மிக அவசியம். இதனால் நற்பலன்களையே அடையலாம். இவர்.

ராகம்:- புன்னாகவராளி. தாளம்: ஆதி

தம்மதமே சால உயர்வென்று - நிதம்
நம்மவர் புரிவதினை வென்று
எம்மதமும் ஸம்மதமென்று – மன
நிம்மதியுறுவோம் நாமின்று - என

போதனை செய்து தனது பிரும்மதேஜோ பலத்தால், இந்துக்கள், முகம்மதியர்கள், பாரசீகர்கள், கிறிஸ்துவர்கள், பௌத்தர்கள் பண்டிதர்கள், பாமரர்கள் தனவான்கள். தரித்ரர்கள், எல்லோரையும் ஒரே விதமாக அன்பு பாராட்டினார். தாம் எல்லோரையும் சமமாக நேசிப்பதுபோல் ,ஜனங்களும் ஒருவரை யொருவர் நேசிக்க வேண்டும் என்பதை வசனத்தினாலும், நடத்தையாலும் காண்பித்தார். யாராகிலும் ஒருவரை ஒருவர் வெறுத்தால் மனம் புண்படுவதாகவும் தங்கள் விரோதிகளைக் கூட நேசித்தால் தன் மனசந்தோஷம் அடைவதாகவும் தன் செய்கையாலும் வெளிப்படுத்தினார்.

சில இடங்களில் ஜனங்கள் அறிவின்மையால் ஏற்படுத்திய இந்து முஸ்லீம் கலகங்களை தடுப்பதற்கு வழிகாட்டியாக இருந்தார். மசூதியின் இடிந்த சுவர்களை இந்துக்களால் புனர் நிர்மாணம் செய்யும்படியும், மசூதியில் வாத்யம் வாசிப்பதால் உண்டாகும் சச்சரவைத் தீர்க்க மசூதியிலேயே வேத கோஷங்கள், பஜனைகள், வாத்ய முழக்கங்கள், இவைகளை ஏற்படுத்தி இதற்கு முஸ்லீம்களே டமாரம் அடிப்பதற்கு வேண்டிய சில ஏற்பாடுகளை செய்தார். இதனால்

தான் வசித்து வந்த மசூதியை ஸர்வ மத ஆலயமாக மாற்றி சில சமயங்களில் இந்துக்கள் ''பூஜை'' செய்யவும், சில நேரங்களில் முகம்மதியர் 'நமாஸ்'' செய்யவும், சில நேரங்களில் இதர மதத்தினர் தம் தம் வழக்கப்படி பூஜை செய்யவும், தான் தான் எல்லோருக்கு மான ஒரே தெய்வம் என்பதை ஸ்தாபித்தார். இப்பொழுதும் இதே மாதிரி நடந்து வருவதை சீரடியில் பார்க்கலாம். இதே கொள்கையை நம் கதைகளில் கண்டபடி அக்பர் சக்ரவர்த்தி தன் க்ஷத்திரிய பலத்தினுல் நிரந்தரமாக செய்ய முடியாத இந்து முஸ்லீம் ஒற்று மையை பாபா தன் ஜீவிய காலத்தில் ப்ரும்ம தேஜோபலத்தினுல் சாதித்து வந்தது அவர் ஸ்தூல சரீரம் மறைந்த பின்னும் வெகு மும்முரமாகவும், ஆர்வத்தோடும் நடந்து வருகின்றது. இதை வருடா வருடம் லக்ஷக்கணக்கான ஸகல மதத்தினரும் கூடி அகில இந்திய ஸாயி சங்கம் நிரந்தரமானதின் மூலம் அறியலாம்.

---

# அத்தியாயம் 4

இவ்வளவு சக்தியும் ஸாயி பாபா எப்படி பெற்ருர். இவர் சாதாரண மனிதனைப் போலல்லவோ சமீபகாலத்தில் இருந்தார் என்பதை அறிய பெரும்பான்மையோர் ஆவலாக இருப்பார்கள். இவர் பெற்ற பூர்ண சக்தி குருவினிட மிருந்து வந்ததே. அவர் பெயர் கோபால் ராவ் தேஷ்முக் என்பது. இவர் தற்போது நிஜாம் ராஜ்யத்திலுள்ள சேலு என்ற கிராமத்தில் ஜிண்டூர் பர்காஞ என்ற சில கிராமங்களடங்கிய ராஜ்யத்திற்கு தேஷ்முக்காக (கவர்னராக) ராணுவ உடைதரித்து, உறைவாளணிந்து, கோட்டை, காலாட்படை, குதிரைப் படைகளுடன் ஆண்டுவந்தார். இவர் குணத்திலும், தனத்திலும், ஞானத்திலும், பாண்டித்யத்திலும் முதிர்ந்தவர். இவர்

திருப்பதி வெங்கடேச பெருமானின் தீவிர பக்தர். இவர் பக்தி விசேஷத்தினுலும், இவரது தெய்வீகத் தன்மையினுலும், எல்லோரும் இவரை "வெங்கடேச மயமான மானீயர்" என்று அழைப்பார்கள்.

ஒரு நாள் இவர் கோட்டை மதிற் சுவற்றின்மேல் அந்தி வேளையில் உலாவிக் கொண்டிருக்கையில் அகஸ்மாத்தாய் (தற்செயலாய்) சற்று தூரத்தில் கீழே ஆடையின்றி உட்கார்ந்திருக்கும் ஓர் அழகிய பெண்மணியைக் கண்டார். மனுஷ்யபிரகிருதியினுல் உண்டாகும் காம விகாரம் சற்று ஏற்பட்டது. இம்மாதிரி சந்தர்ப்பத்தில் வேறு எவரேனும் இவரைப்போல் தனமும் பதவியும் அடைந்திருப்பவன் பார்த்து காமவிகாரம் ஏற்பட்டால், உடனே எவ்வழியிலாவது அப்பெண்மணியை அடைய விரும்பியிருப்பான். ஆனுல் கோபால் ராவ் தேஷ்முக்கோ பரிசுத்தமான மனது உடையவர். அவர் பரஸ்திரியை தன் தாயாக பாவிப்பவர்.

மாத்ருவத் ப்ரதாராம்ஸ்ச
பரத்ரவ்யாணி லோஷ்டவத்
ஆத்மவத் ஸர்வபூதானி
ய: பச்யதி ஸ: பச்யதி.

என்றபடி தன் கண்கள் செய்த குற்றத்தையும் அதனுல் ஏற்பட்ட துர் எண்ணத்தையும் நினைத்து மிகவும் வருந்தி தனது பூஜை அறைக்குச் சென்றுர். தன்னை ஒரு குற்றவாளியாகவே பாவித்தார். தன் பதவியின் கடமை குற்றம் செய்தவர்களை தண்டிப்பதே என்பதால் பார பக்ஷ மின்றி தானும் தண்டிக்கப்பட வேண்டுமென்று மனத்தினில் ஊஹித்து கொண்டார். ஆகையினுல் ஸ்ரீ வெங்கடேசப் பெருமாளின் சன்னதியினில் நின்று கொண்டு பிரார்த்தித்து தனது காமுற்ற கண்கள் குற்றவாளி என்று தீர்மானித்து அதற்கு தகுந்த தண்டனை விதிக்க இரண்டு சோணி ஊசிகளைக் கொண்டு தன் இரு கண்களையும் குத்திக்கொண்டு பார்வையை இழந்தார். இப்படிப்

பட்ட செய்கையை நாம் என்ன வென்று சொல்லுவோம்! இவரை மகனீயர் என்று மட்டும் சொன்னால் போதாது. இவர் வெங்கடேச பெருமானின் அவதாரமே. இச்சம்பவத்தை கேள்விப்பட்டு அவரது குருவும் மனைவி மக்களும் ஓடி வந்து "என்ன காரியம் செய்து விட்டீர்" ஏன் இந்த அவசரம்! இந்த நாட்டை இனிமேல் யார் ஆளுவது. எவ்விதம் வெங்கடேசப் பெருமாளுக்குப் பூஜை செய்வது! உடனே அந்த பெருமாளுக்கு வேண்டிக்கொண்டு கண் பார்வை திரும்பக் கொடுக்கக் கேளுங்கள்." என்ற பல்வாறு வற்புறுத்தினார்கள். எல்லோரும் பகவானிடம் பிரார்த்தித்தார்கள். தினமும் தடமாடிக்கொண்டே பூஜையை செய்தார். சில நாள் கழித்து ஒரு நாள் பூஜை அறையிலிருக்கும் போது கண் பார்வை பெற்றார். அப்போது ஸ்ரீ வெங்கடேசப் பெருமானை புகழ்ந்து பாடுகிறார்.

உன்னாலேயல்லவோ
கண்பெற்றுலவுவது. வெங்கடேசா
கண்ணாரக்கண்டேன்
காருண்யமதை யின்றே. வெங்கடேசா

இப்பேர்பட்ட அரிய செயல்களைச் செய்து காண்பித்த இப் பெரியாரின் கியாதி ஊரெங்கும் பரவியது. இவரை ஒரு பெரிய மஹான், புண்ணியசாலி திருப்பதி வெங்கடேசரின் பூர்ண சக்தி வாய்ந்தவரென்றும் புகழ்ந்து கொண்டாட ஆரம்பித்தார்கள்.

ஒரு நாள் ஒரு பிறவிக்குருடியை அவள் தாயார் அழைத்து வந்து வெங்கடேசரைப் பிரார்த்தித்து கண்பார்வை அளிக்கும்படி வேண்டிக்கொண்டாள். குருநாதன் உடனே அறைத்த மிளகாம் விழுதை அக்குருடியின் கண்களில் தடவினார். என்ன ஆச்சரியம்! பிறவிக்குருடி தன் கண் பார்வையைப் பெற்றாள். கண் பெற்றதைக்குறித்து ஆனந்தம் கொண்டாள். இது பக்தியின் மகிமையன்றோ; மனம் பூரித்த அப்பெண்மணி குருநாதன் பாதத்தை நமஸ்கரித்து பாடுகிறாள்.

# அத்தியாயம் 5

ராகம்: புன்னுகவராளி தாளம்: சாபு

டன்னுள் பரிதவித்தேன்
இன்னுள் நின்-அருள் கண்டேன்- குருநாதா
முன்னுள் செய்வினை தீர்த்து
கண் பார்வை யளித்திட்ட- குருநாதா
உன் நாட்டினரே யன்றி
என்னுட்டினரும் போற்றும்- குருநாதா
பொன்னுட்டினை யடைய
நன்னெறி காட்டிடுவாய்- குருநாதா

இப்படிப்பட்ட மகிமை வாய்ந்த கோபால் ராவ் தேஷ்முக் வெங்க டேசரின் அவதாரம் என்று சொல்லத் தேவையில்லை. கண் ணுலே காண்கிறேம். இவரே ஸாயி பாபாவிற்கு வெங்கடேசரின் பூர்ண சக்தியையும் அருளையும் அளித்த குருநாதர். இவரிடம் ஸாயி பாபா எப்படி வந்தார். அவர் யார் என்ற விஷயங்களை கவனிப்போம்.

பாபா என்பவர் பத்ரி என்ற கிராமத்தில் சிறுகுழந்தையாக ஓர் ஏழைப் பிராமணரிடத்தில் இருந்தார். அக்காலத்தில் முகம் மதியர் அல்லாதற்கு "தலைவரி" விதித்திருந்தார்கள். இந்த பிரா மணர் ஏழையாகவும், சம்சாரியாகவும் இருந்ததினுல் இக் குழந் தைக்கும் சேர்த்து வரிகொடுக்க மிகவும் கஷ்டப்பட்டார். மேலும் இக்குழந்தையும் வியாதியினுல் பீடிக்கப்பட்டு, விடாது அழுது கொண்டிருந்தது. இதையெல்லாம் நினைத்து வருந்திக் கொண் டிருக்கும் பொழுது தற்செயலாக வாசலிலே ஒரு பக்கிரி நின்று பரிதாபத்துடன் நோக்கி குழந்தையை தன் வசம் கொடுக் கும்படி கேட்டார். பிராமணரும் சம்மதித்து பக்கிரியிடம் இந்தக் குழந்தையைக் கொடுத்தார். அந்நாளி லிருந்து ஐந்தாண்டு வரை அக்குழந்தை அம்முகமதியரிடமே வசித்து வந்தது. அப்பொழுதே

பெற்ளோர் இறந்தனர். அப்பக்கிரி ஒரு ஸூபி பக்திமான். ஒரு நாள் தனது தேகவியோகம் நெருங்குவதை அறிந்து தனது மனைவியைக் கூப்பிட்டு. ''நான் சிறிது காலத்தில் இறந்து விடுவேன். நீ இக்குழந்தையை எடுத்துக்கொண்டு சேலுவில் இருக்கும் பிராம்மணர் கோபால் ராவ் தேஷ்முக்கிடம் சென்ருல் அவர் உங்களைக் காப்பாற்றுவார்.'' என்று சொல்லி, சில நாளைக்குப்பின் காலமானர். சில நாள் கழித்து பகிர் மனைவியும் காலமானர்கள்.

இந்த தருணத்தில் வெங்கடேசரின் வரலாற்றை கவனிப்போம். இவர் சுற்றுப்பிரயாணம் செய்யும் சமயம் ஔரங்காபாத்தில் தங்கும்படி நேர்ந்தது. ஒருநாள் அவர் ஒருஸூவாக்ஷா என்ற முஸ்லீம் சமாதியின் அருகில் செல்லுங்கால், திடீரென்று அதிலிருந்து ஓர் அசரீரி வாக்கு கேட்டது. பன்னீர் தெளிப்பது போல் நீர் கசிந்தது. அந்த சப்தம் என்ன வென்று கவனிக்கும் பொழுது, கீழ்க்கண்ட வார்த்தைகள் கேட்டன. ''ஸலாமாலேகும் காசி ராமானந்த, நீ போன ஜன்மத்தில் காசியில் சன்னியாசியாய் இருந்தாய். இப்பொழுது கிரகஸ்தாச்ரமத்தில் இருந்து ராஜ்யம் ஆண்டு கொண்டிருக்கிருய். உன்னுடைய பூர்வ ஜன்மத்தில் சிஷ்யனுயிருந்த கபீர் உன்னிடம் திரும்பவும், ஒரு முகம்மதிய குழந்தையாய் தன் தாயுடன் வருகிறன் என்ற வாக்கை கோபால்ராவ் கேட்டு வியப்புற்றனர். பின்னர் வெங்குசா கோட்டைக்குத்திரும்பி பூஜை அறையில் இருக்கும்பொழுதுவெளியில் தன் தாயுடன் குழந்தை கபீர் வந்திருப்பதை யறிந்து ஏற்கனவே உள்ளே புக தடுக்கப்பட்ட தாயையும் சேயையும் வரவழைக்கச்செய்தார். தாயும் குழந்தையும் அவரிடம் வர, மஹநீயர் குழந்தையைப் பார்க்கவும் குழந்தை தாவி அவரது பாதங்களை நமஸ்கரிக்க, ''என்கபீர் தாஸா'' என்று தழுவிக் கொண்டார். இருவர் மனமும் ஐக்கியப்பட்டது. தாயுக்கு படித்தனமும், இடமும் தனியாக அளித்து கோட்டைக்கு வெளியில் வசிக்க வசதி செய்தார். குழந்தையும் அது முதல் குருவிற்கு பணி விடைகள் செய்து கொண்டிருந்தது. இக்குழந்தை தான் பூர்வ ஜன்மத்தில் கபீராக இருந்தது. இந்த ஜன்மத்தில்.

# அத்தியாயம் 5

## ஸ்ரீ கோபால் ராவ் தேஷ்முக்.

ராகம் : ஷண்முகப்ரியா    தாளம் : திரிபுட

தருமம் தழைத்திட நிஜாம் ராஜ்யத்தில்
பிரும்ம குலத்தினில் அவதரித்து
வெங்கட்டரமணனே அன்புடன் பூஜை செய்த
அந்தணப் பெரியோரை குருவாயடைந்த ஸ்ரீ

இப்படியாக வந்தடைந்த குழந்தை பாபா தினந்தோறும் குருவிற்குப் பணிவிடைகள் செய்தும் அவாது முகத்தையே பார்த்துக் கொண்டும் காலம் கழித்து வந்தார்.

ராகம் : கேதார கௌளம்.    தாளம் : திரிபுட

குருவே தெய்வமென்று அவர்க்குப் பணி செய்யும்
வழியே பக்தி யென்று அனைவர்க்கும் போதித்து
அவாருளால் திவ்ய ஞானமும் பெற்று
அஹமே ப்ரும்மமெனும் ஆத்ம ஞானியாம்

குருவிடம் வசித்து வந்தார். குருவிற்கும், குழந்தை பாபாவிற்கும் ஏற்பட்டுள்ள பரஸ்பர அன்பைக் குறித்து மற்ற சிஷ்யர்களுக்கு பொறாமை ஏற்பட்டது. குருவும் தனது முக்கியமான பக்தனும் ஒருசமயம் காட்டில் தங்கியிருக்கும்படி நேரிட்டது பொறாமை கொண்ட சில சிஷ்யர்கள் இந்த தக்கதருணத்தைப் பயன்

படுத்திக்கொள்ள முயன்றனர். "எப்படியாவது அம்முகம்மதியனைக் கொன்று விட்டால் குரு நம்மிடம் பிரியமாக இருப்பார்" என்று ஆலோசித்து சிறிது தூரத்திலிருந்து கல் எறிந்து கொன்று விடுவதாக தீர்மானித்தனர். அவ்வாறே ஒரு கல்லை எடுத்து பாபாவைக் குறிபார்த்து ஒருசிஷ்யன் எறிந்தான். கல் பாபாவின் அருகாமையில் வரும் தருணம், குருநாதன் பார்த்ததும் அந்தக் கல் அந்தரத்திலேயே நின்றது. மற்றொரு கல் எறியகுறி தப்பி குருவின் மண்டையில்பட்டு ரத்தம் பீறிட்டது. இதைக் கண்டபாபா திடுக்கிட்டு மனம் கலங்கி "குருநாதா, என்னாலல்லவோ தங்களுக்கு இப்படிப்பட்ட காயம் உண்டாயிற்று. நான் எங்கேயாவது சென்று விடுகிறேன். நீங்கள் தீங்கின்றி இருக்கலாம், உத்தரவு கொடுங்கள்" என்றான். "இது பெரிய காயம்அல்ல" என்று சொல்லி குருநாதன் காயத்தின் மேல் சுண்ணாம்பு தடவி கொண்டு தலையைச் சுற்றிக் கட்டினார். திடீரென்று குருநாதனுக்கு ஓர் எண்ணம் உண்டாயிற்று. உடனே பாபாவைக் கூப்பிட்டு "நீ என்னை விட்டு பிரியும் நாள் வந்துவிட்டது. நீ அதோ சற்று தூரத்திலிருக்கும் லம்பாடியிடம் போய் பால் வாங்கிக் கொண்டுவா" என்று உத்தரவிட்டார். பாபா அந்த லம்பாடியிடம் குருநாதனுக்கு பால் கேட்க அதற்கு அந்த லம்பாடி "என்னுடைய மாடு மலடு. கன்று போட்டு ஐந்து வருடங்கள் ஆகிறது. அது எவ்வாறு கொடுக்கும்?" என்றான். இது குருவிற்கு தெரிந்தவுடன்,) அப் பசுவைகொண்டுவரும்படி சொன்னார். குருநாதர் ஒரு கையினால் மாட்டின் கொம்பைப் பிடித்துக்கொண்டு மற்ற கையினால் முதுகின் மேல் தடவினார். பிறகு "இப்பொழுது கற" என்றார். அப்படியே மாட்டைக் கறக்க, மாடும் மூன்று சேர் பால் கொடுத்தது. பாலை குருநாதர், பாபாவை அழைத்து கையை நீட்டும்படி சொல்லி மூன்று தரம் கொடுத்து, பருகும் பொழுது "குருக்ருபா பூர்ணப்ப்ரஸாத ஸித்தி ரஸ்து – பூர்ணம் – பூர்ணம் – பூர்ணம்" என்றார். இதனால் பாபாவிற்கு தன்னிடமிருந்த பூர்ண சக்தி, ஞானம், ஸத்குணம், ஸ்வரூபம் எல்லாவற்றையும் அளித்தார். அந்தரத்தில் நிற்கும் கல்லைக் கொண்டு வரச்சொல்லி தன் பாதத்தில் வைக்கச்சொன்னார். பிறகு தலையில் காயத்தைச் சுற்றி கட்டிய துணியை அவிழ்த்து,

பாதத்திலிருந்த கல்லேயும் துணியையும் குரு ப்ரஸாதமாகக் கொடுத்தார். பிறகு "நீ இன்று முதல் எங்கு வேண்டுமானுலும் செல்லலாம். ஆனுல் மேற்கு நோக்கி செல்வாயாக. உன்னிடம் பூர்ண சக்தி இருக்கின்றது. இதைக்கொண்டு ஜனங்களுக்கு நன்மையே புரி" என்று ஆக்ஞாபித்தார்.

நிற்க, குருவின் மேல் கல்லே எறிந்த சிஷ்யன் சவமாகக் கிடப்பதைப் பார்த்த மற்ற சிஷ்யர்கள் மனம் பதை பதைத்தனர். தங்கள் தவறுதல்களே உணர்ந்து, குருநாதரிடம் ஓடோடியும் வந்து காலில் விழுந்து தங்களே மன்னிக்கும் படியும்,இறந்தவனுக்கு உயிர் பிச்சை அளிக்குமாறும் வேண்டிக் கொண்டார்கள். கருணு மூர்த்தியான குருநாதன் அவர்களே மன்னித்தார். ஆனுல் இறந்தவனே உயிர்ப்பிக்க இனி பாபாவே வல்லவன் என மொழிந்தார். அவர்களும் அவ்வாறே பாபாவை வணங்கி பிரார்த்தித்தனர். ஆனுல் வினயமுள்ள பாபா தன்னிடம் குருவிற்கும் மிஞ்சிய சக்தி யில்லே யென்று சொல்லி குருவின் பாத தூளியை எடுத்து இறந்தவன் மீது தூவினுர். என்ன ஆசசரியம்! இறந்தவன் மீண்டும் உயிர் பெற்று எழுந்தான். தன் தவறை மன்னிக்கும்படி குருவிடம் விடை பெற்றுக்கொண்டான். குருவின் பிரசாதமாகிய கல், துணி இவைகளோடு மேற்கு திக்கை நோக்கிப் பாபா புற ப்பட்டார். குருவும் இதர சிஷ்யர்களும் கோட்டைக்குத் திரும்பினர்.

---

# அத்தியாயம் 6

கோட்டைக்குத் திரும்பிய குருநாதன் தன் மந்திரியைக்கூப்பிட்டு' தனக்கு பிறகு, தன் பேரப் பிள்ளேக்குப் பதில் கொஞ்ச காலம் ஜமீன் காரியங்களேக் கவனிக்கும்படி சொன்னுர். பிறகு

பக்தர்களைக் கூப்பிட்டு. "பக்தர்காள், இன்னும் சில நேரத்தில் இந்தப் பிராமணன் இந்த தேகத்தை விட்டு அகன்று ஓங்கார ரூபியான ஈசன் பாதத்தில் போய்ச் சேரும். இப் பார்த்திவ தேகத்தை அதற் குறிய, ஸம்ஸ்காரங்கள் செய்து, அக்னி ஸத்காரம் முடித்து விடுங் கள். எந்த இடத்தில் சிதை இருக்கின்றதோ, அங்கே பில்வம் முளைக்கும். அதன் அடியில் இரண்டு முழம் வெட்டிப் பார்த்தால், திருப்பதி வெங்கடேசரின் சிலை அகப்படும். அதற்கு கோவில் கட்டி அந்தக் கோவிலேயே என் சமாதியாக பாவிக்க வேண்டியது. வேறு சமாதி தேவையில்லை. ஸ்ரீ வெங்கடேசன் பாதம் சேர்ந்த ஜீவன் வெங்கடேசனே." என்று கூறினார். எல்லா பக்தர்களும் வேதங்களை கோஷித்துக் கொண்டிருந்தனர்.

அச்சமயம் கோபால் ராவ் தேஷ்முக் "இதோ ஈசன் பாதம் சேருகிறேன் என்று" 'ஓம்' 'ஓம்'

ஓமித்யே காக்ஷரம் பிரும்ம
வ்யாஹரன் மாமனு ஸ்மரன் !
ய: ப்ரயாதி ஸமத் பாவம்
தியா நாஸ்த் யத்ர ஸம்சய !!"

என்று சொல்லி சாய்ந்தார். பெருத்த கல்பூர ஜ்வாலை வெங்க டேசரின் பாதத்தில் தோன்றியது. குரு நாதன் சொல்லியபடி மேற் கொண்டு காரியங்கள் நடந்தேறின. சில தினங்கள் கழிந்து சிதை இருந்த இடத்தில் கவனிக்க குருநாதர் சொல்லியபடியே வில்வம் முளைத்திருந்தது. அவ்விடத்தை தோண்டிப் பார்க்க ஒரு வெங்க டேசப் பெருமாளின் விக்கிரகம் அகப்பட்டது. அதைக் கொண்டு ஒரு கோவில் நிர்மாணித்தார்கள். அது இப்பொழுது சேலு என்ற கிரா மத்தில் "வெங்கடேச மந்திரம்" என்னும் கோவிலாக விளங்கி வருகிறது. இப்பொழுதும் அதற்கு வேண்டிய பூஜைகள் கோபால் ராவ் சொத்திலிருந்தே நடை பெறுகின்றது. இவருக்கு வாரிசாக உள்ளவர் சுபேதார் மல்ஹார் ராவ் என்பவர்.

மேற்கு திக்கை நோக்கிச் சென்ற பாபா ஓர் காட்டில் இருந்த ஒருபெரிய மரத்தினடியில் உட்கார்ந்து கொண்டிருந்தார். அச்சமயம் ஒரு வழி போக்கன் காணமற் போன தன் குதிரையைத் தேடி அவ் வழியே வந்தான். பாபா அவனைக் கூப்பிட்டு "புகை பிடிக்கலாமா" என்றார். வருத்தத்துடன் இருந்த அந்த வழிப் போக்கன், "நான் குதிரையைத் தேடிக் கொண்டிருக்கிறேன். இப்பொழுது புகையா வது பிடிக்கவாவது என்று அலுத்துக் கொண்டான். பாபா உடனே ஒரு இடத்தைக் குறிப்பிட்டு அங்கு சென்றால் குதிரையை காணலாம் என்றார். பாபா காட்டிய திசையில் பார்க்க குதிரையும் கிடைத்தது. சந்தோஷமடைந்த அம்மனிதன் பாபாவை புகழ்ந்து, புகை பிடிக்க நெருப்பும் தண்ணீரும் இல்லை யென்று கூற, பாபா தன் சோடா தடி யினால் கீழே தட்டி தண்ணீரும் நெருப்பும் வரவழைத்த சக்தியைக் கண்டு ஆச்சரியம் கொண்டான். அவ்வழிப் போக்கனின் விருப்பத் திற்கிணங்கி, பாபா அவன் வீட்டிற்குச் சென்றார். அங்கிருந்து ஒரு கல்யாண கூட்டத்துடன் சீரடி என்ற கிராமத்திற்கு வந்து சேர்ந்தார். அப்பொழுது அவருக்கு வயது 16. சீரடி என்ற கிராமம் அகமத் நகர் ஜில்லாவில் ரஹதாவிலிருந்து கோபர்காம் போகும் ரஸ்தாவில் இருக்கிறது. அந்த ரஸ்தாவில் "கண்டோபா" என்ற ஒரு கோவில் இருக்கின்றது. அந்த கோவிலுக்கு பாபா வந்து சேர்ந்தார். அப்பொழுது அவர் தலையில் சிறிது வாலையும் உடம்பில் அங்கியும் உடுத்தி கையில் ஒரு சோடா தடியும், கல்லும் கொண்டு ஒரு பக்கிரி போல் காணப்பட்டார். அந்த கோவிலுக்கு சொந்தக்காரனான மஹல்சாபதி அங்கு உட்கார்ந்து கொண்டிருந்தான். பாபா கோவிலைக் கண்டதும் "இது நல்ல கோவில் ஊரை விட்டு ஒதுங்கியும் நல்ல நிழல் தர, மரங்கள் அடர்ந்தும் சாந்தமாக இருப்பதினால், நம் போன்ற அதிதிகள் வாசம் செய்யவும், யோகத் தியானத்திற்கும் ஏற்ற இடம்' என்று தீர்மானித்து மஹல்சாபதியிடம் தன் எண்ணத்தை வெளியிட்டார். இவர்

ராகம்:                                                    தாளம்: ஆதி

சீரடி தன்(னி)ல் வந்தவர் – ஸ்ரீ சாயி தேவன் (சீரடி)

சரணம்

பதினாறு வயதினில் பக்தர்கள் துயர் தீர

கதி தரவே வந்தவர் – மஹானுபாவர்          (சீரடி)

இப்படிப் பட்டவரை, சாதாரண பக்கிரி என்று மனதிற் கொண்டு இடம் கொடுக்க மறுத்தான்.

பிறகு பாபா கிராமத்திற்குள் சென்றார். அங்கு ஒரு இடத்தில் ஒரு வேப்பமரம் கண்டார். அந்த வேப்பமரத்தின் இலைகள் ஒரு பாதி கிளையில் இனிப்பாகவும், மற்றொரு பாகம் கசப்பாகவும் இருக்கும். இந்த மரத்தை இப்பொழுதும் சீரடியில் காணலாம். அதனடியில் வெட்டிப்பார்த்தால் செங்கற்கள் தென்பட்டன. அது தான் குரு சமாதி என்றார். அதன் பேரில் இப்பொழுது கட்டிடம் இருக்கிறது. இந்த இடம் தங்குவதற்கு ஏற்றஇடம் என்று தீர்மானித்து அவ்விடத்திலேயேதங்குவதாக தீர்மானித்தார். ஒரு இடிந்த மசூதியும் இருந்தது. அந்த இடத்திலும் அவர் தங்குவது வழக்கம். இந்த மசூதி தான் தற்போதுள்ள " துவாரகமாயி "

தன் உணவைப்பற்றி பாபா கவலைப்பட்டதில்லை. அவருக்கு உணவு அளிக்க அவ்வூரில் சிற்சில பேருக்கு பாத்யம் உண்டு என்பதை சொல்லிக் கொள்ளுவார். அப்படி உணவு அளித்தவர்களில் முக்கியமானவர் படேலும் அவரது சம்சாரமும். நான்கு ஜன்மமாக படேலின் சம்சாரம் தன் சகோதரி என்பதைத் தெரிவித்தார். பாபா மசூதியில் வசிக்க ஆரம்பித்தவுடன் அதில் ஒரு அக்னி குண்டம் வளர்த்தார். அந்த குண்டம் இப்பொழுதும் எரிந்து கொண்டிருக்கிறது, மசூதியில் விளக்கு ஏற்றுவதற்க்கு பாபா சில கடைகளில் சென்று எண்ணை யாசிப்பது வழக்கம். இப்படி பாபா தினம் எண்ணை யாசித்து வருகையில் ஒரு நாள் எல்லாக் கடைக்

காரர்களும் கூடி "இன்று கேனப்பக்கிரி வந்து எண்ணெ யாசித்தால் கொடுக்க மறுத்து விடுவோம். மசூதியில் விளக்கு ஏற்ற என்ன செய்கிறான் பார்ப்போம்'' என்றார்கள். வழக்கப்படி பாபா எண்ணெ யாசித்து வருகையில், 'செக்கு ஆட்டவில்லை' என்ற ஒரு பொய்க்கார ணத்தைசொல்லி எண்ணெ இல்லையென்றும் கூறினார்கள். அதைக் கேட்ட பாபா திரும்பவும் மசூதிக்குச் சென்றார். அவர் பின்னல் கடைக்காரர்களும் வேடிக்கை பார்க்கச் சென்றார்கள். பாபா மசூதிக்குச் சென்று எண்ணெத் தகரத்தைக் கையிலெடுத்துக் கொண்டு பானையிலுள்ள தண்ணீரை அதில் விட்டு அலசி ஒட்டிய எண்ணெயையும் தண்ணீரையும் குடித்து, பிறகுபானைத் தண்ணீரை நான்கு மண் அகல்களில் நீரை ஊற்றி, திரியை வைத்து ஏற்றினார். கடைக்காரர்கள் அந்த விளக்குகள் அணைந்து விடும் என்று எதிர் பார்த்து கைக் கொட்டி சிரித்தனர். ஆனால் என்ன ஆச்சர்யம் விளக்குகள் பிரகாசமாக எரிந்தன. மணிகள் சென்றன. ஆகிலும் விளக்குகள் அணையவில்லை. இதைக் கண்ட கடைக்காரர்கள் ஆச்சர்யமும் திகிலும் கொண்டனர். பாபாவின் காலில்விழுந்து மன்னிப்புக் கேட்டுக் கொண்டார்கள்

இப்படியிருக்க ஒரு நாள் சில துஷ்டர்கள், எரிந்து கொண்டிருந்த அக்னி குண்டத்தில் நிறையகட்டைகளை போட்டு விட்டார்கள். அது உடனே பெரிய ஜ்வாலையாக எரிய ஆரம்பித்து தார்சு கட்டகைளை பற்றிக்கொள்ளும் அளவுக்குவளர ஆரம்பித்தது. இதைக்கண்ட பாபா தன் சோடா தடியினால் பக்கத்தில் இருந்த ஒரு தூணில் "ஸபூர், ஸபூர் ஹட் மாகே! ஹட் மாகே!'' (பின்னே போதணிந்து போ) என்று ஐந்து தடவை தட்டினார். இப்படிச் சொன்னதும் ஜ்வாலையும் கொஞ்சம் கொஞ்சமாக தணிந்து விட்டது. இதைக்கண்ட ஜனங்கள "இவர் ஒரு பெரிய மகானாய் இருக்கவேண்டும் அக்னி வாயு வருணன்முதலானவர்கள் இவர் சொற்படி நடக்கிறார்கள்.'' என்று முன்னைவிட பக்தியுடன் கொண் டாடினார்கள். துஷ்டர்களும் தாங்கள் செய்த தவறை மன்னிக்கும்படி வேண்டினார்கள். பாபா அவர்களை மன்னித்து "பொய் சொல்ல

லர்காது" என்ற உண்மையைப் போதித்தார். இத்துஷ்டர்கள் தான் முன்னால் 'எண்ணெ இல்லை' என்று பொய் சொன்னவர். பிறகு எல்லோரும் பாபாவை பாடினார்கள்.

---

ராகம் : சங்கராபரணம். தாளம் : ஆதி

மஹிமை யறிய தரமா — பாபா உந்தன் (ம)

சரணம்

எண்ணெயாய்த் தண்ணீரை எரித்துமே யன்று

உண்மையாயுன் சக்தியை உலகிற்குக் காட்டிய உந்தன் (ம)

என்று துதி பாடினார்கள். முதலில் அவரை கோவிலில் தங்கவிட மறுத்த மஹல்ஸாபதி இதற்கு முன்னமேயே பாபாவைவணங்கி பாதத்தில் பூ வைத்துப் பூஜிப்பான்.

ராகம் : கல்யாணி தாளம் : த்ரிபுட

பக்கிரி வேடம் பூண்டு பாமரரை ரக்ஷிக்க

சீரடியை அடைந்து சித்திகள் பலசெய்து

பல வினைக்கு ஹரி நாமமே மருந்தென்று

பக்தர்க்கருள் பரம கிருபா நிதி

# அத்தியாயம் 6

இவருடைய புகழ் மந்திரத்தினுல் பரவவில்லை, மந்திரக்காரர்களும் இவ்வாறு செய்யலாம். ஆனுல் பாபாவிற்கும் மந்திரக்காரர்களுக்கும் உள்ள வித்தியாசங்களை நாம் அறிந்தால் பாபா கடவுளின் அவதாரமே என்று சொல்லத் தேவையில்லை.

முதலாவதாக பாபா தன் அவதார குண பிரும்ம தேஜோ பலத்தினுல் பஞ்ச பூதங்களையும் அடக்கினுர். பஞ்ச பூதங்களும் அவர் சொற்படி நடந்தன. ஆனுல் குணுனு பந்தத்தில் உழலுகின்ற மாந்தரீகனே தன் மாந்தரீகத்தினுல் சில காரியங்களைச் செய்யலாம். அவர்களுடைய சக்தியும் அதனேடு போய்விடும். அதாவது மாந்தரீகர்களுக்கு ஒரு குறிப்பிட்ட அளவு சக்தி தான் (Limited Power). இருக்கிறது. ஆனுல் பாபாவுக்குள்ள சக்தி ஒரு வரம்பு இல்லாதது. (Unlimited Power)

இரண்டாவதாக மாந்தரீகர்கள் தங்கள் சக்திகளை தங்கள் நலனுக்காகவே உபயோகப் படுத்துவார்கள். இதனுல் லோகத்தில் சில ஜனங்களுக்கு கஷ்டம் வரலாம். ஆனுல் பாபா தன் சக்தியை லோகத்திலுள்ள ஜனங்களின் நலனுக்காவே பார பட்சமின்றி உபயோகித்து வந்தார். ஆதலால் அவருடைய மஹிமை இந்தியா முழுவதும் பரவியதில் ஆச்சரியமில்லை.

இப்படி இவருடைய புகழ் பரவ அவ்வூரிலிருந்த சாமா என்ற ஒருபள்ளி உபாத்தியாயரும், கணக்குப் பிள்ளையும், லக்ஷ்மிபாய் என்ற பெண் மணியும் அவரிடம் தீவிர பக்தி கொண்டு சிஷ்யர்களாக அமர்ந்தார்கள் பாபாவை.

குருர் பிரும்மா குருர் விஷ்ணு:
குருர் தேவா மஹேச்வா:
குருஸ் ஸாக்ஷாத் பரப்பிரும்ம
தஸ்மைஸ்ரீ குரவே நம:

என்று இந்துக்கள் வழக்கப்படி சந்தணம் பூசியும், குங்குமம் இட்டும் மலர்களால் அர்ச்சித்தும், அவரே விஷ்ணு, சிவன், சக்தி. அவரே சகல, உயிரும் என்பதாகப் பூஜித்து வந்தார்கள்.

# அத்தியாயம் 7

பாபாவின் புகழ்பரவி எல்லா இந்துக்களும் பூஜிப்பதைக் கேள்விப்பட்ட ஒரு முகம்மதிய சன்யாசி மௌலான ஜவர் ஆலி தான் இருக்கும் இடமாகிய ரஹதாவிலிருந்து சீரடிக்கு வந்தார். பாபாவுக்கு இந்துக்கள் பூஜை செய்வதைக் கண்டவுடன் பாபாவின் அருகில் சென்று, மௌலான, "உனக்கு குரான் தெரியுமா? ஷரீப் சொல்லுவாயா?" என்று கேட்டார். பாபா தனக்கு ஒன்றும் தெரியாது என்று சொன்னவுடன், "அப்படியானல் நீ என்னுடன் ரஹதாவிற்கு வந்து எனக்கு பணிவிடைகள் செய்து கொண்டு குரானும், ஷரீப்பும் கற்றுக்கொள்." என்று மௌலான சொன்னர். பிறகு பாபாவை ரஹதாவிற்கு அழைத்துச் சென்றார். ரஹதாவில் பாபாவிற்கு வீட்டைச்சுத்தம் செய்தல், விறகு உடைத்தல், தண்ணீர் கொண்டு வருதல் முதலிய பணிவிடைகளை மௌலான கொடுத்தார். இப்படி சில தினங்கள் செல்ல சீரடியில் ஹல்ஸாபதி, சாமா, இன்னும் மற்ற பக்தர்கள் தாயைப் பிரிந்த கன்றுபோல் பாபாவைப் பிரிந்ததினுல் விசன பட்டார்கள். பிரிவைத் தாங்க முடியாமல் ஒரு நாள் எல்லோரும் சேர்ந்துப் ரஹதாவிற்குச் சென்று பாபாவை அழைத்து வர புறப்பட்டார்கள். ரஹதாவில் மௌலானவுக்கு பாபா செய்யும் பணிவிடைகளைக் கண்டு மனம் வருந்தி, மௌலான ஜவர் ஆலியை பாபாவைத் தங்களுடன் அனுப்பும்படி வேண்டிக் கொண்டார்கள். மௌலான அதற்கு செவி சாய்க்க வில்லை. மறுபடியும் மன்றாடிக் கேட்ட பின் மௌலான யுக்தியாக "தன்னையும் அதிதியாக சீரடிக்கு அழைத்துச் சென்றால் தான், என் சிஷ்யன் பாபாவும் கூட வருவான்." என்று சொன்னன். எவ்வகையிலாவது பாபாவை அழைத்துப் போக எண்ணம் கொண்டவர்களாதலால் இந்த உடன்

பாட்டிறகுச் சம்மதித்தார்கள். அதன்படி மௌலானுவையும், பாபாவையும் சீரடிக்கு அழைத்து வந்தார்கள். சீரடியில் பாபாவிற்கு மரியாதைகள் மனப்பூர்வமாய் நடந்தனவே ஒழிய இந்த மௌலானு விற்கு நடக்கவில்லை. மேலும் எவ்விதத்திலாவது மௌலானுவை விரட்டிவிடத் தீர்மானித்தார்கள். இதற்கு அவ்வூரிலிருக்கும் தேவ தாஸ் என்ற சன்னியாசியிடம் சென்று உதவி கோரினுர்கள். மௌலானுவை தேவ தாஸிடம் தர்க்க வாதத்திற்கு ஏற்பாடு செய் தார்கள். மௌலானுவை அதன்படி தேவதாஸிடம் அழைத் துப்போக, தேவதாஸ் மௌலானுவை சில கேள்விகளுக்கு சந்தேகம் தீர பதில் அளிக்குமாறு கேட்டுக் கொண்டார். அக் கேள்விகளாவன: சமபுத்தி, குணம், நற்கதிக்கு வழி, சமத்துவமே, யோகம் நிர்தோஷம், பரோபகாரம், சாந்தம் இவைகளைப் பற்றி யவைகளே, இக்கேள்விகளுக்குத் தக்க பதில்கள் கொடுத்தவுடன், "இவைகள் ஒரு சிறுவனிடம் பொருந்தியிருந்தால் அவன் பெரியவனு அல்லது வயது முதிர்ந்ததினுல் பெரியவன் என்பவன் பெரியவனு" என்று தேவதாஸ் மௌலானுவைக் கேட்டார். மௌலானு, இக் குணங்கள் பொருந்தியவனே சிறியவன் ஆனுலும் பூஜிக்கத் தகுந்தவனென்றும், இத்தகைய குணங்கள் சிறுவனுன பாபாவிடம் பூர்ணமாக நிரம்பி யிருக்கின்றது என்று ஒப்புக் கொள்ளவும் சபையில் உள்ளவர்கள் கை கொட்டிச் சிரித்தார்கள். இதைக் கண்ட மௌலானு வெட்கித்து தான் இனி இவ்விடம் இருப்பதிற்கு தகுதியல்ல என்றெண்ணி, தனக்கு சீரடியில் தங்க இஷ்டமில்லை என்பதாகச் சொல்வி போய்விட்டார்.

இந்து சன்னியாசியாகிய தேவதாஸ்செய்த நரித்தந்திரத் தினுல் பாபாவைத் திரும்ப முன் போல் பூஜித்து அருள் பெற வசதி ஏற்பட்டது. இதனுல் பாபாவின் மஹிமை இந்து சன்னியாசி யாகிய தேவதாஸாலும், முகம்மதிய சன்னியாசியாகிய மௌலானு ஜவர் ஆலியாலும் போற்றப்பட்டது.

பாபா மசூதியில் இருந்து கொண்டு தன்னிடம் வந்த பக்தர் களுக்கு அவரவர் மனதில் நினைத்த கடவுளைப் போல் உருக்காட்டி ஞர். அவர் முக்கியமாக கிருஷ்ணனுகவும், ராமனுகவும், சிவனுகவும், மாருதியாகவும் தரிசனம் தந்ததினுல் அவரை எல்லோரும் கிருஷ்ண ராம சிவ மாருதி ரூபசாயி, என்று துதித்தனர்.

கீதையில் (ஸ்லோகம் 11, அத்தியாயம் 4.)

யே யதா மாம் ப்ரபத்யந்தே தாம்ஸ்ததைவ் பஜாம் யஹம் 1
என்று சொல்லியபடி பாபா:செய்து காட்டினார். எப்படி யெனில்,

ராகம்: தோடி — தாளம்: ஆதி

நினைத்தார் நினைத்தபடி நேரினிலே தோன்றி
வினைதனைத் தீர்த்திடும் வள்ளலுனை யடைந்தால்
மனை தோறும் மாணிதியம் மலைபோல் குவிந்திடுமே
உனையல்லால் உலகில் உற்ற துணையுமுண்டு

புரந்தரே என்பவரின் சம்சாரத்திற்கு பாபாவை தரிசனம் செய்யும் காலத்தில், தன் மனதில் விட்டோபாவைக் காண வேண்டும் என்று நினைத்துக் கொண்டிருக்கும் பொழுது பாபா விட்டோபா ருக்குமணி ரூபமாக காட்சி அளித்தார். தென் ஆப்பிரிக்கா டாக்டர் ஒருவருக்கு ராமர் ரூபமாக காட்சி தந்தார். ஸ்ரீமதி ஜேவுக்குகணபதி யாகவும், புவ॥ என்பவருக்கு கிருஷ்ணனுகவும் தரிசனம் அளித்தார்.

பாபா சில நாட்கள் சமாதியிலும், சில நாட்கள் சற்று தூரத்திலிருக்கும் சாவடியிலும் இரவு நேரங்களில் படுப்பது வழக்கம். அச்சமயத்தில் இந்துக்களும், முகம்மதியர்களும் இவர் கூட படுத்திருப்பார்கள். பாபாவை இந்துக்கள் பூஜிப்பது பிடிக்காத மீர்ஜ ஹான் என்ற ஒரு முகம்மதியன் நடு நிசியில் எழுந்திருந்து பாபாவைப் பார்த்து "உங்களையும், இஸ்லாமிய மதத்தையும் இந்த இந்துக்கள் தங்களை பூஜை செய்வதினுல் கெடுத்து விடுகிருகள். ஆகையால் இந்த இந்துக்களின் தலையைச் சீவ உத்தரவு கொடுங்கள் என்று வாளை உறுவினன். இதைக்கண்ட இந்துக்கள் நடு நடுங்கினுர்கள். பாபா எழுந்து இந்துக்கள் மத்தியில் நின்று கொண்டு, "அவர்கள் ஒன்றும் அறியாதவர்கள். நான் அனுமதிப்பதினுல் தான் எனக்கு பூஜை செய்கிறுர்கள். ஆகையால் என் தலையைச் சீவு," என்று தலையை நீட்டினுர். இதைக் கேட்ட முகம்மதியன் வெட்கித்து பாபாவிடம் மன்னிப்பு கேட்டுக் கொண்டு அவ்விடத்தை விட்டகன்றுன்.

இப்படியாக பாபாவை அவரவர்கள் தங்கள் மதத்தின் படியும் இஷ்டப்படியும் பூஜை செய்வதற்கிருந்த சில தடைகள் விலகின வுடன், தங்கள் இஷ்டப்படி ஒவ்வொருவரும் பூஜித்து வந்தார்கள்.

இப்படி எல்லோரும் பாபாவைத் தெய்வமாகக் கொண்டாடும் காலத்தில் பாபா ஈஸ்வர பேட்டிக்குப் போக நினைத்து மாஹல்சாபதி ஷ்யாமா முதலிய வர்களிடம்" தான் இன்று அல்லா பேட்டிக்குப் போகப் போகிறேன். மூன்று நாள் கழித்துத் தான் திரும்புவேன். அப்படி திரும்பி வராவிட்டால் இத் தேகத்தை வேப்பமரத்தினடி யில் புதைத்து விடுங்கள்". என்று சொல்லி விட்டு மூச்சை அடக்கி கொண்டார். சிறிது நேரத்தில் பாபாவின் தேகம் சவம் போல் ஆகிவிட்டது. இதைக்கேள்வியுற்ற போலீசார் சட்டப்படி மரண விசாரணை செய்து, தேகத்தை அடக்கம் செய்ய தொந்திரவு செய்தனர் மஹல்சாபதி பாபாவின் உத்திரவை போலீசாருக்கு தெரியப்படுத்தி மூன்று நாள் கழித்துத்தான் எதுவும் செய்யத் தீர்மானிக்கலாம் என்று கண்டிப்பாக கூறினார். போலீசாரும் திரும்பினர்.

நம் புராணத்தில் ஸ்ரீ சங்கரரை பற்றிய உண்மையை அறிவது முக்கியம் ஆதி சங்கரர் தன் பிரும்மச்சர்ய ஆசிரமத்தில் இருக்கும் காலத்தில் சரஸ்வதி தேவியின் கேள்விக்கு பதில் அளிக்க தன் தேகத்தை விட்டு ஒரு அரசனின் தேகத்தில் புகுந்து திரும்ப தன் தேகத்தில் வந்து புகுந்த சம்பவத்தை ஞாபகப்படுத்துவது அவசியம். இதேமாதிரி பாபா எல்லோருக்கும் தெரியும்படியாக சுமார் 1886ம் ஆண்டில் செய்து காண்பித்தார்.

அவர் சொல்லியபடி, மூன்று நாள் கழித்து பாபா தூக்கத் திலிருந்து எழுந்தது போல் எழுந்ததைக் கண்டு எல்லோரும் வியந்தனர். பாபா தனக்கு. இன்னும் கொஞ்சம் தேகப் பிராப்த வேலை பாக்கியிருப்பதாயும் அதற்காகவே திரும்பி வந்ததாகவும் சொன்னார். இப்படி திரும்பி வந்திராவிட்டால் உலகத் தோருக்கு அவரால் ஏற்பட்ட நன்மைகள் கிடைத்திருக்காது.

இப்படி பஞ்ச பூதங்களை அடக்கி ஆள்வதாலும் பிறர் மனக் குறைகளைத் தீர்த்து வைப்பதாலும், காயப்பிரவேசம் செய்யும் சக்தியினாலும் வெளிப்பட்ட இவரது மஹிமை ஒரு சாதாரண மந்திரவாதியது போல் அல்ல; ஒரு பிரும்ம தேஜோபலத்தினால் செய்யக் கூடியது. ஆகையால் இவர் கடவுளின் அவதாரமே தவிர மற்றொன்றுமில்லை, என்று பக்தர்கள் தீர்மானித்து தங்கள் குறைகளைத் தீர்த்துவைக்கவும் இகபர முக்திக்கு வேண்டியசாதனைகளை அருளவும் திரள் திரளாக ஜனங்கள் அண்டி வந்தடைந்தார்கள். இவ்வருடத்திலிருந்து (1886ம் ஆண்டு முதல்) 1918ம் வருடம் அக்டோபர் மாதம் சமாதி யடையும் வரையில், தானாக தன்னை வந்தடைந்த பக்தர்களுக்கும் பிராரப்த கர்மாவினால் இவரால் கவரப் பட்ட சில பக்தர்களுக்கும், ஒரே விதமாக அன்பு பாராட்டி இகத்திற்கும் பரத்திற்கும் சுகத்தை அளித்து மோக்ஷ சாம்ராஜ்யத்திற்கு வழிகாட்டியாக இருந்தருளினார்.

இப்படி பாபாவினால் சேர்த்துக் கொள்ளப்பட்ட சில பக்தர்களின் சுய அனுபவத்தை கவனிப்போம்.

# அத்தியாயம்—8

பம்பாய் இராஜதானியில் அகமத் நகர் என்னும் ஜில்லாவில் ஒரு டிபுடி கலெக்டர் இருந்தார். அவர் பெயர் நானா சாகிப் சந்திரோர்கர். இவர் தானாக பாபாவிடம் செல்லவில்லை. சுமார் 1910–11ம் வருடம் கோபாகான் தாலுக்காவில் உத்தியோக முறையில் (ஜமாபந்திக்கு) போயிருந்தார். இந்த ஜமாபந்திக்கு கிராம முன்சீப்புகள் தங்கள் கணக்குகளை பரிசீலனைக்கு எடுத்து போவது வழக்கம். சீரடி கிராம முன்சீப் பாபாவின் பக்தனாதலால் ஜமா பந்திக்கு போவதற்கு முன் வழக்கப் பிரகாரம் பாபாவின் உத்திரவைக் கேட்கச்சென்றார். பாபா உத்திரவு கொடுத்து விட்டு அவரிடத்தில் டிபுடி கலெக்டர் நானாவை தான் அழைத்ததாகச் சொல்லச் சொன்னார். ஜமாபந்தி வேலை முடிந்தவுடன் ஊருக்குத் திரும்புவதற்கு முன் டிபுடி கலெக்டரிடம் தயங்கி நின்றார். நானா காரணம் வினவ, பாபா

சொல்லிய செய்தியைத் தெரிவித்தார். நாணு, "என்ன, நான் அப்பக்கிரியின் முகம் பார்த்ததில்லை. அவரும் என் முகத்தைப் பார்த்ததில்லை. நீ சொல்லுவது சரியில்லை. அப்படி நீ சொல்லு வது உண்மையானாலும் நான் வரமுடியாது" என்று பதிலளித்தார்.

திரும்பத்திரும்பச் சொல்ல இதே பதில் தான் நாணுவிட மிருந்து கிடைத்தது. மூன்றும் தடவையாக பாபாவின் உத்திர வின்படி நாணுவைக் கூப்பிட, "நான் தற்சமயம் வரவில்லை. பிறகு வருகிறேன்" என்று சொன்னார். இதையும் பாபாவிடம் தெரி விக்க, "நாணு எப்படியும் வருவான்" என்று பாபா சொன்னார். சில தினங்கள் கழிய கிராம முன்சீப் பாபாவை "இன்னும் நாணு வரவில்லையே" என்று கேட்க, பாபா "என் நாணு என்னிடம் வராமல் இருக்கமாட்டான். கண்டிப்பாக வருவான் இது ருணானு பந்தபாசம் என்று சொல்லிக் கொண்டிருக்கும் பொழுது, வாயிலில் ஒரு குதிரை வண்டி வந்து நின்றது, அதிலிருந்து நாணு இறங்கினார். இறங்கின உடன் நாணு தன் மனதில் "இவர் முஸ்லீமா, இந்துவா? இவருக்கு என்ன கொண்டு போய்க் கொடுப்பது? இவ்வூர்க் கடை யில் ஒன்றும் கிடைக்காதே என்று நினைத்துக் கொண்டு கோட்டின் ஜோபியில் கையை விட்டார். அதில் ஒரு பொட்டலம் இருந்தது. அதில் அன்று நடந்த Evening Partyயில் கொடுத்த பாதாமும் கல் கண்டும், இருந்தது. இது கொடுத்தாலே போதும். கல்கண்டு அகப் பட்டதினால் இவர் ஒரு முஸ்லீம் என்று நினைத்து பாபாவிடம் சென்று அவர் பாதத்தின்மேல் சிரஸை வைத்து நமஸ்கரித்து பாதாம் கல்கண்டைக் கொடுத்தார். பாபா ஒரு கல்கண்டை எடுத்து வாயில் போட்டுக் கொண்டு முகமலர்ச்சியுடன், "மிக இனிப்பாக இருக் கிறது. ஈஸ்வரன் உனக்கு பூர்ண அனுக்கிரகம் செய்வார்" என்று மிகுந்த கல்கண்டை நாணுவிடம் பிரசாதமாக கொடுத்தார்.

பிறகு நாணு பாபாவை "என்னை நீங்கள் கூப்பிட்டீர்களா? எதற்காக?" என்று கேட்டார். பாபா "அடே நாணு!" என்ற பிரியமான குரலுடன் 'இவ்வுலகில் ஆயிரக்கணக்கான ஜனங்கள் இருக்கின்றார்கள். அவர்கள் எல்லோரையுமா கூப்பிடுகிறேன்?

உன்னை மட்டும் கூப்பிட காரணம் இருக்காதா? நீயும் நானும் நான்கு ஜன்மங்களாக இணைபிரியாமல் வாழ்ந்திருந்தோம். இப் பொழுதும் இந்த ஜன்மத்தில் அப்படியே வாழ்வதற்கு உன்னைக் கூப்பிட்டேன். இது பகவத் கீதையில் நான்காவது அத்தியாயம் ஐந்தாவது சுலோகம் சொல்லியபடி.

பஹூனி மே வ்யதீதானிஜன்மானி தவ சார்ஜுன ।
தா ந்யஹம் வேத ஸர்வாணி நத்வம் வேத்த பராந்தப ॥

எனக்கும் உனக்கும் இதுவரை எத்தனையோ ஜன்மங்கள் சென்றன அவற்றையெல்லாம் நான் அறிவேன், அவற்றை நீ அறியமாட்டாய். எப்பொழுது உனக்கு ஓய்வு இருக்கின்றதோ அப்பொழுதெல்லாம் வந்துவிட்டுப் போ" என்று உத்திரவு கொடுத் தார். நானு போகுபொழுது "எனக்கென்ன மறுபடியும் இங்கு வர எனக்கு உத்தேசம் இல்லை வேலையுமில்லை". என்று மனதிற் குள் நினைத்து சென்று விட்டார்.

பம்பாய் ஜில்லாவில் ப்ளேக் பரவியிருக்க, புதிதாகக் கண்டு பிடித்திருக்கும் சீரம் இன்செச்ஷனை ஜனங்களுக்கு கொடுக்க கவர் மெண்டார் உத்தேசித்திருந்தனர். ஜனங்களோ பயத்தினுல் மறுத்த தினுல் அதிகாரிகளை முதலில் குத்திக் கொண்டு வழி காண்பிக்க ஜில்லா கலெக்டரிடமிருந்து நானுவிற்கு உத்திரவு வந்தது. நானு பயத்தினுல் என்ன செய்வதென்று தெரியாமல் தவித்துக் கொண்டிருக்கும் காலத்தில் பாபா பூர்வ ஜன்மத்தைப் பற்றி தெரி வித்தது ஞாபகம் வந்தது. அவரையே யோஜனைக் கேட்கலாம் என்று புறப்பட்டார். வண்டியை விட்டிறங்கி பாபாவை நமஸ்கரித்து, "ஒரு விஷயம் கேட்கவேணும் கேட்கலாமா?" என்ருர். உடனே பாபா, "நீ குத்திக் கொள், அதில் ஒரு அபாயமுமில்லை. காய்ச்சல் தலைவலி ஒன்றும் வராது சௌக்கியமாக இருக்கும்" என்று சொன்னுர். இப்படி தன் மனதிலிருக்கும் கேள்வியை சொல்லா மலே அறிந்து, அதற்குத் தக்க பதில் அளித்ததினுல் இவர் ஒரு

''ஸர்வக்ஞானி'' என்று தீர்மானித்தார். இது முதல் பாபாவிடம் நானுவிற்கு தீவிர பக்தியும் பற்றுதலும் ஏற்பட்டது. நானுவின் தகப்பனுர் முகம்மதிய குரு என்ருல் வெறுப்பார். ஆகையினுல் நானுவின் தகப்பனுர் ஆட்சேபிப்பாரோ என்ற சந்தேகத்தையும் பாபா ''ஆட்சேபிக்கப் போவதில்லை'' என்று தீர்த்து வைத்தார்.

மற்ருெரு சமயத்தில் நானு ஹரிச்சந்திரமலையில் உள்ள ஒரு கோவிலுக்குப் போனுர். பாதி தூரம் சென்றவுடன் இவருக்கு களைப்பு மேலிட்டது. இவருடன் வந்தவர்களும் முன்னமையே சென்று விட்டனர். இவருடைய உடம்பு பாரியாக இருந்ததால் அவர்களுடன் வேகமாகச் செல்ல முடியவில்லை. தனியாக களைப்பினுல் தவித்துக்கொண்டு தாகம் மேலிட என்ன செய்வதென்று யோசிக்கலானுர். உடனே அவர் மனதில் ''பாபா இருந்தால் எனக்கு கொஞ்சம் தண்ணீர் கொடுக்க மாட்டாரா'' என்று நினைத்தார். இதே சமயத்தில் பாபா சீரடியில் ''அடே! நானுவிற்கு தாகமாக இருக்கின்றது. கொஞ்சம் தண்ணீர் கொடுக்கவேண்டும்'' என்று சொல்லிக் கொண்டிருந்தார். நானு இப்படி தாகத்தினுல் தவித்துக் கொண்டிருக்கும் பொழுது ஒரு மலைவாசி வருவதைப் பார்த்தார். அந்த மலைவாசியை நோக்கி, தாகம்டா. குடிக்க தண்ணிர் வேணும்டா'' என்ருர். அதற்கு அந்த மலைவாசி, ''என்ன பெரியவரே, உட்கார்ந்திருக்கும் பாறையின் அடியில் தண்ணீர் இருக்கின்றது. பாறையைப் புரட்டினுல் ஜலம் தெரியும்'' என்ருன். அப்படியே பாறையைப் புரட்ட அதன் அடியில் கையளவு ஜலம் இருக்கக்கண்டு, அதைக் குடித்தார். குடித்து விட்டு திரும்பி பார்க்கையில் மலைவாசியைக் காணவில்லை, நானு ''என்ன அதிசயம்! இது பாபாதான் செய்திருக்கவேண்டும். தாகத்தைத் தணிக்க வேண்டிய ஜலம் தான் கிடைத்தது'' என்று நினைத்தார். ஆனுல் இது உண்மையே. கொஞ்ச நாட்கள் சென்ற பிறகு, நானு ஒரு நாள் பாபாவிடம் செல்ல, பாபா. ''நானு, உனக்குத் தாகமாக இருந்த தருணத்தில் கையளவு தண்ணிர் கொடுத்தேனே, குடித்தாயா?'' என்ருர். நானுவிற்கு இதனுல் ''பாபா கண் கண்ட தெய்வம்'' என்ற உண்மை தெரிய வந்தது.

மற்றொரு சமயம் நானு நடுக்காட்டிலுள்ள பத்மாலயம் என்ற கணபதி கோவிலுக்குப் போனார். அது ஸ்டேஷனிலிருந்து வெகு தூரத்தில் உள்ளது. மாலை வேளைக்குப் பிறகு வண்டி போக்கு வரத்துக்கிடையாது. தீர்மானித்தபடி இவர் கோவிலுக்கு நடந்து சென்றார். பாதிதூரம் கடந்து சென்றபிறகு இவருக்கு பசியும் தாகமும் உண்டாயிற்று. பாபாவை ஒருகப் தேனீர் டீயாவது கிடைக்காதா என்று பிரார்த்தித்தார். கோவிலுக்கு இரவு அகால வேளையில் போய்ச் சேர்ந்தார். அந்த வேளையில் கோவிலில் ஒருவரும் இருப்பது வழக்கமில்லை. ஆனால் பாபாவின் அருளால் அக்கோவிலில் அர்ச்சகர் ஒரு கூஜாவில் சூடான டீ வைத்துக் காத்திருந்தார். நானு வந்து விட்டானு" என்றார். இருவரும் சந்திக்க நானுவிற்கு "பாபாவின் உத்திரவின்படி உனக்கு வைத்திருக்கிறேன்" என்று அந்த அர்ச்சகர் டீயைக் கொடுத்தார். டீயை சாப்பிட்டு விட்டு பாபாவின் கருணையை நினைத்து ஆனந்தம் அடைந்தார்.

மற்றொரு சமயம் நானு ஜாம் நகர் என்ற கிராமத்தில் முகாம் போட்டிருந்தார். அவருடன் அவர் சம்சாரம், பத்து மாதம் கர்ப்பம் உள்ள புத்திரி, வேலைக்காரர்கள் இருந்தார்கள். அவ்வூர் பக்கத்தில் ரயிலுமில்லை. பெரிய ஊருமில்லை. அருகாமையில் உள்ள ஜல்காம் என்ற ஸ்டேஷன் முப்பது மைல் தூரம். நானு பெண்ணிற்கு பிரசவ வேதனை ஆரம்பித்தது, மிகவும் கஷ்டப்பட்டாள். நானு என்ன செய்வதென்று" பாபாவின் மேல் பூர்ண நம்பிக்கைவைத்து தேற்றிக் கொண்டிருந்தார். இப்படி இருக்கும் சமயத்தில் சீரடியில் பாபா, பாபுகீர் என்ற கோஸாயியைக் கூப்பிட்டு, "நீ, உடனே புறப்படு. ஜாம்நகரில் நானுவும், சம்சாரமும், பெண்ணும் இருக்கிறார்கள். பெண்ணிற்குப் பிரசவ வேதனை ஆரம்பித்திருக்கிறது. இந்த ஊதியை எடுத்துக்கொண்டு, கொடுத்துப் போடச் சொல், சுகப் பிரசவம் ஆகும். அவரிடம் இரண்டு ரூபாய் கொடுத்தனுப்பினார். பாபுகீர் கோஸாயி, "என்ன பாபா, கோபர்கான் ஸ்டேஷனிலிருந்து ஜால்காம் ஸ்டேஷனுக்கு பிரயாண செலவு டிக்கட் ரூபாய் 1-14-0. அங்கிருந்து 30 மைல் வண்டிப் பாதையில் செல்ல வேண்டும். இந்த இரண்டு ரூபாயை வைத்துக் கொண்டு எப்படிப் போவது" என்றார்.

பாபா "ஏ, பாபுகீர், போடா, எல்லாம் ஏற்பாடு ஆகும்," என்ருர். ராம்கீர் ஜல்காம் ஸ்டேஷன் வந்து சேர்ந்து, "இது என்ன பாழும் ஸ்டேஷன் இதிலும் ப்ளேக் அதிகாரிகள் வந்து "நீ எந்த ஊர்" என்று பிடித்துப் போகிருர்கள். நம்மை பிடிக்காவிட்டாலும் எப்படி இந்த 30 மைல் போய் சேருவது" என்று ஒன்றும் புரியாமல் திகைத்து நின்ருர். உடனே "பாபுகீர்!" என்று கத்திக்கொண்டு ஒரு வில்லேச் சேகவன் வந்தான். பாபுகீர் நான் தான் அந்த பாபுகீர் என்று சொன்னவுடன் "எஜமான் டிபுடி கலெக்டர் வண்டி உங்களை அழைத்துப்போக வந்திருக்கிறது. உங்களுக்குச் சாப்பாடும் அனுப்பியிருக்கிருர்." என்று அவ்வில்லேச் சேவகன் சொன்ஞன். பாபுகீர் சாப்பிட்டுவிட்டு வண்டியில் ஏறிச் சென்ருர். மிகவும் விரக்தியோடு நாஞ வருந்திக் கொண்டிருக்கும் சமயத்தில், குதிரை வண்டி வரும் சப்தம் கேட்டது. சேவகனும் ஓடிவந்து பாபுகீர் வருவதைத் தெரிவித்தான். "பாபுகீர் வீட்டிற்குள் சென்று பாபா கொடுத்தனுப்பிய பிரசாதத்தை நாஞவிடம் கொடுத்தார். பிர சாதத்தை கொடுத்ததும் உடனே சுகப்பிரசவம் ஆகிவிட்டது. எல்லோருக்கும் சுகப் பிரசவத்திஞல் மிகவும் சந்தோஷம். வண்டி எங்கே என்று கவனிக்க அதைக் காணவில்லே. பாபுகீர் தனக்கு நாஞ வண்டியும், சாப்பாடும் டவாலிச் சேவகனிடம் அனுப்பியதைப் பற்றி சொல்ல, நாஞ திகைத்து, "நான் ஒன்றும் அனுப்பி வைக்க வில்லேயே" என்று சொன்ஞர். பாபுகீர் உடனே, "ஓ! இதை பாபா தான் அனுப்பியிருக்கவேண்டும் ஏனெனில் நான் எப்படி 30 மைல் போவது என்று கேட்ட பொழுது, எல்லாம் ஏற்பாடாகும்" என்று பாபா சொன்ஞர். ஆகையிஞல் இது பாபாவின் அபார மகிமை, சக்தி, கருணே எல்லாம்.

ருஞஞு பந்தத்தில் பாபா நாஞவிற்கு மேலே சொல்லியபடி இகத்தில் புரிய வேண்டிய உதவிகளே புரிந்தார். இதுமட்டுமல்ல கீழ்கண்ட பிரகாரம் பரத்திற்கு வேண்டிய உதவியும் புரிந்தார். ஆதலால் தான் பாபாவிற்கும் நாஞ முதன்மையான பக்தராக இருந்தார். நாஞவிஞலேயே பாபாவின் புகழும் பம்பாய் மாகாணம்

பூராவுமுள்ள மிகப்படித்தவர்களுக்கும், பெரிய உத்தியோகஸ்தர் களுக்கும் பரவியது.

நானுவிற்கு பாபா ஆத்மா என்ருல் என்ன, கடவுளை அடைவது எப்படி, கடவுளை அறிவது எப்படி என்பதை செயலினுலேயே விளக்கிக் காட்டினுர். ஹிருதய சுத்தமாலுலும் பக்தி இருந்தாலும் தான் கடவுளைப் பார்க்கலாம். ஹிருதயத்தில் தீவிரமான பரிசுத்தம், ஆசை ஒழிப்பு, தானம் இவைகள் இருந்தால் ஈசுவரனை அடைய லாம். பொய் சொல்லக்கூடாது. குற்றயுக்தி கூடாது. அதிகார மமதைகூடாது என்ற உண்மைகளை நடத்தையிலேயே அனுபவத்தி லறியும்படி செய்தார். நானு கோபர்கானில் முகாம் போட்டிருந்த பொழுது கோதாவரி தீரத்தின் அருகாமையிலுள்ள தத்தர் கோவிலி லிருக்கும் ஒரு பிரும்மச்சாரி கோவிலிலிருந்து ஆற்றுக்கிறங்க படிவசதி செய்து கொடுக்க பண உதவி வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். நானு அதற்கு சர்க்கார் உதவி தேவையில்லை. தானே ரூ. 300 மறுதடவை வரும் பொழுது கொடுப்பதாகச் சொன்னுர். இதை செய்ய மறந்துவிட்டார். ஆனுல் மறுபடியும் ஒரு முறை அவ்விடம் செல்ல நேர்ந்த சமயத்தில், பிரும்மசாரிக்கு தெரியாதபடி போய்விட வேண்டுமென நினைத்து பாதை தப்பி நடந்தார். அப்பொழுது கால்களில் முட்கள் தைத்தன. அவருடன் வந்த நண்பனுக்கும் முட்கள் தைத்தன. பாபாவிடம் திரும்பிவரும் பொழுது பாபா நானுவைப் பார்த்துக் கோபித்துக்கொண்டு, ஏண்டா இந்த குற்ற யுக்தி. திருட்டுத்தனம் எதற்காக செய்யவேண்டும். அந்த பிரும்ம சாரியடத்தில், கொடுக்க பணம் இப்பொழுது இல்லை. மறுபடி வரும்பொழுது கொடுக்கிறேன் என்று சொன்னுல் போகிறது. அதில் தவறு ஒன்றும் இல்லை. அவனைப் புறக்கணித்துப் பாதை விட்டு நீங்கிச்செல்வானேன். அதனுல் அல்லவோ முள்தைத்து கால் காயமாய் விட்டது என்ருர். இதிலிருந்து நானு தெரிந்து கொண்டது என்னவென்ருல் குற்றயுக்தி, திருட்டுவழி செய்யக் கூடாது என்பன.

ஒரு நாள் நாணுவின் வீட்டிற்கு பிச்சைக்காரி ஒருவள் வந்தாள். நாணு மாடியில் இருந்தார். பிச்சைக்காரி உள்ளே வந்து உட்கார்ந்து கொண்டு நாணுவின் மனைவியிடம் பொரி கேட்டாள். அவள் ஒரு ஆழாக்கு கொடுத்தாள். பிச்சைக்காரி திருப்தி அடையவில்லை. வீட்டில் இருந்த பொரியில் பாதி பாகம் கொடுத்தாள். அப்படியும் திருப்தியடையாமல் முழுவதையும் கொடுத்துவிடும்படிக் கேட்டாள் மாடியில் இருந்த நாணுவிற்கு இந்த சப்தம் கேட்டது. மேலே இருந்து "ஏ, பிச்சைக்காரி போகிறாயா? கல்தா கொடுக்க சொல்லட்டுமா?" என்று கூச்சல் போட்டார். உடனே பிச்சைக்காரி போய் விட்டாள்.

அடுத்த தடவை நாணு பாபாவிடம் சென்றபொழுது பாபா நாணுவிடம் ஒன்றும் பேசவில்லை. "என் பாபா என்னிடம் பேச வில்லை?' என்று நாணு கேட்டதற்கு பாபா, "சொன்னதைக் கேட்காதவர்களிடம் நான் பேசமாட்டேன்" என்றார். நாணு அதற்கு 'நீங்கள சொல்லுவதை யெல்லாம் கேட்கிறேன் என்றார். அதற்கு பாபா. "பிச்சைக்காரி கேட்டால் சாந்தமாகச் சொல்லக் கூடாதா? கல்தா கொடுப்பேன் என்று சொல்லவேண்டும்? உன் அதிகாரதோரணையை ஒரு பிச்சைக்காரியிடமா காண்பிக்க வேண்டும்? என்றார். இந்த நிகழ்ச்சியிலிருந்து உத்தியோக அதிகாரத்தை யாரிடமும் காண்பிக்கக் கூடாது என்று தெரிந்து கொண்டார்.

ஒரு சமயம் பாபாவிடம் நாணு உட்கார்ந்திருந்த பொழுது இரண்டு முகம்மதியஸ்திரீகள் முகமூடியுடன் வந்திருந்தார்கள். நாணு எழுந்து அப்பால் போய்விடப் பார்த்தார். பாபா அதைத் தடுத்து விட்டார். மூத்த ஸ்திரீ முகமூடியை நீக்கிவிட்டு பாபாவை நமஸ்கரித்தாள். பிறகு இரண்டாவது ஸ்திரீயும் அதே மாதிரி முகமூடியை அகற்றி விட்டு நமஸ்கரித்தாள். அவள் மிகவும் அழகாக இருந்தாள். இவள் முகத்தைப் பார்த்த நாணுவிற்கு. "என்ன அழகு! இந்த அழகிய முகத்தை மறுதடவை பார்க்க மாட்டாமோ?" என்ற எண்ணம் உண்டாயிற்று. பாபா உடனே அவர் தொடையில்

தட்டினார். அந்த ஸ்திரீகள் போனவுடன், "நானா, எதற்காகத் தட்டினேன் தெரிந்ததா?" என்றார். அதற்கு நானா, "தெரிந்தது. ஆனால் உங்கள் எதிரிலேயே இருக்கும் பொழுது இம்மாதிரி கெட்ட எண்ணங்கள் என் உண்டாகின்றன? என்றார். பாபா அதற்கு, "நீயும் தசையும் இரத்தமும் உடைய மனிதன் தானே. ஆகையினால் அந்த எண்ணம் உண்டாவது இயற்கைதான். ஆனால் அந்த அழகைப் பார்த்தவுடன் அதனுள் இருக்கும் ஈசுவரனையும், அவருடைய சிருஷ்டி விநோதங்களையும், நினைப்பாராகில் எல்லாம் சரியாகிவிடும்" என்றார்.

ஸாஹுநி மெட்டு தாளம்: ஆதி

பல்லவி

தோற்றத்தில் மயங்காதே—மனமே
தோற்றத்தில் மயங்காதே—நீ வெளித்
தோற்றத்தில் மயங்கியே மாற்ற மடைந்திடாதே—தோ

சரணங்கள்

1. தோற்றந்தனிலே மிக ஏற்றமாயிருப்பினும்
கூற்றவன் விடுவானோ சாற்றிடுவாய் சற்றே
தோற்றமெனும் பெரும் போர்வைக்குள்ளிருந்திடும்
போற்றற்குரிய புண்ணிய மூர்த்தியை நினையாமல்—தோ

2. ஆரணங்காயினும் அனங்கன் போலிருப்பினும்
வேறெண்ணம் கொண்டு நீ பார்த்திடாதே—ஜகத்
காரணன் தன் திருக்காரியமெனப் பரி
பூரணன் தன் பாதம் போற்றிடாமலே நிதம்—தோ

இதனால் பாபா நானாவிற்கு காம இச்சைகளை அடக்குவதைப் பற்றி உபதேசம் செய்தார்.

ஒரு தடவை பாபா நாணுவை பூர்ண போளி நிவேதனத்திற்கு செய்யச சொன்னார். நாணு செய்து கொண்டு வைத்து, பாபாவை ருசி பார்க்கச் சொன்னார். கொஞ்சநேரம் ஈக்களும், எறும்பும் மொய்த்தன். பாபா அதை தொடாமலே, "நான் தின்றாய் விட்டது. எடுத்துகொண்டுபோய் நீயும் சாப்பிடு" என்றார். நாணு அதற்கு, 'நீங்கள் சாப்பிட்டால் தான் நான் சாப்பிடுறேன் என்றார். பாபா மறுபடியும், "நான் பாப்பிட்டாய் விட்டது.' என்றார் நாணு கோபித்துக்கொண்டு சாவடியில் போய் பட்டினியாகப் படுத்துக் கொண்டார். பக்தா படும் துயரத்தை சகியாத பாபா, நாணுவை வரவழைத்து மறுபடியும் சாப்பிடும்படி சொன்னார். அதற்கும் நாணு இணங்காமற் போகவே, "நாணு இந்த $3\frac{1}{2}$ முழ உயரமுடைய மனித உடம்பில் (எண் சாண் உடம்பில்) தான் இருக்கிறேன் என்று நினைத்துக் கொண்டாயா? நான் ஈயின் உருவத்திலும், எறும்பின் உருவத்திலும் இருக்கிறனே். நான் எப்பொழுதோ உன் போளியைச் சாப்பிட்டாகிவிட்டது" என்று விளக்கினார் நாணுவிற்கு அப்படியும் சந்தேகம் தீரவில்லே. பாபா உடனே தமது ஸமிச்ஞையால் நாணு மிக ரகசியமாய் வைத்திருந்த ஒரு சமாசாரத்தைச் சொன்னார். அப் பொழுது தான் நாணு, பாபா தனது அந்தர்யாமி என்று தெரிந்து கொண்டார். ஆகையால் ஈயிலும் அவரே என்று உணர்ந்தார்.

சந்தோர்கர் சமஸ்கிருதத்தில் பாண்டித்யம் பெற்றவர். கீதையில் சங்கர பாஷ்யத்தைப் படித்தவர். வித்தியா பட்டம் பெற்றவர். அவர் வித்யா கர்வத்தை யழித்து அவருக்கு பாபா கீதையில் உள்ள சந்தேகங்களேப் போக்கினார். நாஞ் தினமும் பாபாவின் சாவடியில் உட்கார்ந்துகொண்டு கீதை தார்பரியம் முழுவதையும் தெரிந்து கொண்டார்.

———

# அத்தியாயம் 9.

தாஸ்கணுமகராஜ்:—

தாஸ்கணுமகராஜ் என்பவர் போலீஸ் ஸேவகத்தில் 'ஹவில்தாராக இருந்தார். இவருக்கு பாடல் விஷயத்திலும், நாடக விஷயத்திலும் பிடித்தமிருந்தது. மேலும் கிராம விளையாட்டுகளிலும், வேடிக்கைகளிலும், அதிகம் பிரியம் செலுத்தி வந்தார். இவர் உத்தியோகத்திலிருக்கும் போது நானுசாகிப் சந்தோர்கர், டெபுடி கலெக்டருடன், பாபாவிடம் வரும்படி நேர்ந்தது. பாபா இவரை பார்த்ததும் பிந்திய நிலைமையைதெரிந்து கொண்டு நானுசாகிபிடம் ''இந்த மனிதன் வேடிக்கைகளிலும், உத்தியோகத்திலும் இஷ்டப் பட்டவன். அவைகளை யெல்லாம் அவன் விட்டுவிடட்டும்' என்றார். ஆனால் இந்த விளையாட்டுகளிளும், உத்தியோகத்திலும் மிகவும் விருப்பம் வைத்ததினால் எல்லாவற்றையும் விட்டுவிட முடியவில்லை. ஆனால் கொஞ்சம் கொஞ்சமாக கிராம விளையாட்டுகளிலும் வேடிக்கைகளிலும் சேருவதை விட்டு விட்டார். பாபா உத்தியோகத்தையும் விட்டுவிட்டு என்று சொன்ன காலங்களில், "நான் பார்க்கிறேன்". என்று பதிலளித்து வந்தார். பிறகு 1903ம் வருஷம் இவருக்கு உத்தியோகத்தில் அதிக நஷ்டங்கள் சேர்ந்தமையால் உத்தியோகத்தை விட்டுவிட்டு பாபாவிடம் வந்து சேர்ந்தார்.

பாபா அடிக்கடி ''நாந்தேட்'' என்னுமிடத்தில் இவர் போய் ஜீவிக்க தங்கவேண்டுமென்று சொல்லிகொண்டிருந்தார். பாபாவின் இஷ்டப்படி ''நாந்தேட்'' என்ற ஊரில் இருந்து கொண்டு, கீர்த்தனைகள் கட்டுகிற விஷயத்திலும், விஷ்ணு சகஸ்ரநாமத்தை உச்சரிப்பதிலும், மஹான்களின் ஜீவிய சரித்திரத்தை எழுதுவதிலும் காலம் கழித்து வந்தார். பாபாவின் அருளினால், இதில் கீர்த்தி பெற்று இவருக்கு ஜீவனத்திற்கும் வசதி ஏற்பட்டது. இவர் பல இடங்களில் கீர்த்தனைகள் செய்து கதா, காலக்ஷேபங்கள் செய்து, பாபா பக்தியை பரவச்செய்யும் மார்க்கத்தில் ஈடுபட்டு பாபாவின் புகழையும் பரவச் செய்தார். பத்தாயிரக் கணக்காய் பாபாவின் புகழையும் பரவச் செய்தார். பத்தாயிரக் கணக்காய் பாபாவிடம் ஜனங்கள் ஆதனால் வர முற்பட்டார்கள்.

இந்த மார்க்கங்களில் பணம் வாங்கினதுமில்லை. வாங்குகிறதும் இல்லை. இவர் கீர்த்தனைகள் பாடுவதற்கு முன்னமேயாவது, பாடும் போதாவது, அல்லது பாடினபிறகாவது பணம் தண்டுவதற்காக குல்லாவை சபையோர்க்கு அனுப்பினதுமில்லை. ஏனெனில் பாபா இவரிடம் அடிக்கடி பத்திசெய்யும் காலத்தில் ஈஸ்வரன் மகிமையில் லயித்தே கதைகளைச் சொல்லவேண்டுமே தவிர பணத்திற்கும் பொருளுக்கும் ஆசைபடக்கூடாது என்று உபதேசித்தார். இவர் பாபாவைப் பற்றி அநேக புத்தகங்கள் எழுதியிருக்கிறார். இவர் கதாகாலக்ஷேபங்களினால் பாபாவின்புகழையும் ஈஸ்வரத்தன்மையையும் பரவச்செய்தார். இன்னும் செய்து கொண்டிருக்கிறார்.

---

# அத்தியாயம் 10

## உபாஸினி மஹராஜ்

இது வரையிலும் எப்படித்தன்னை அண்டிவந்த பக்தர்களுக்கு பாபா இம்மையிலும், மறுமையிலும் சுகம் புரிந்தார் என்பதை தெரிந்து கொண்டோம். இப்போது ருணானு பந்தத்தினால் கட்டுண்ட ஒரு பக்தனை தன்னிடம் சேர்த்து அவரை தம்மயமாக்கி கருணை புரிந்ததை கவனிப்போம்.

காசினாத் கோவிந்த உபாசினி சாஸ்திரி என்பவர் மராத்திய பிராமணர். இவருடைய முன்னோர்கள் நல்ல சாஸ்திரங்கள் பயின்றவர்களாயிருந்தும் இவருக்கு கல்வியில் ஆர்வம் இல்லை. ஒருமுறை உபாத்தியாயர் அடித்த காரணத்தால், படிப்பிலிருந்த கொஞ்சம் ஆர்வமும் இவருக்கு குறைந்து போயிற்று. இவர் திடகாத்திர சரீரம் உள்ளவர். சிறுவயது முதல் யோகாசனம் பயிற்சி செய்து வந்தார்.

இவர் குடும்பப்பற்று இல்லாமல் இருந்ததால் சிறுவயதிலேயே இவருக்கு விவாகம் செய்துவைத்தார்கள். இல் வாழ்க்கையில் இவருக்கு விருப்பம் இல்லாததால், ஒருவருக்கும் சொல்லாமல், வீட்டை விட்டு வெளியே சென்றுவிட்டார். சிலகாலம் கழித்து இவரது மனைவியும் இறந்துவிட்டார். அப்போது வீடு வந்து சேர்ந்த போது மறுபடியும் இவருக்கு இரண்டாவது விவாகம் செய்வித்தார்கள். விவாகமானவுடன் மறுபடியும் ஒருவரிடமும் கூறாமல் இவர் பூனாவிற்கு சென்றுவிட்டார். அங்கு பிச்சையெடுத்து, கிடைத்த பிச்சையில் ஒரு பாகத்தை மற்ற பிச்சைகாரர்களுக்கு கொடுத்து தான் பாக்கியை புசித்து காலம் கழித்துவந்தார். ஒரு சமயம் காட்டு மார்க்கமாக போய்கொண்டிருக்கும்போது தன்னை அறியாமலே அன்ன ஆகாரமின்றி சமா நிலையில் இருந்தார். சமாதியிலிருந்து எழுந்தபோது கை கால் சுவாதீனமிழந்து சிரமப்பட்டு ஊர்ந்து சென்றார்.

பிறகு ஆயுர்வேத வைத்தியம் செய்து வந்தார். முதலில் இந்த தொழில் பிரபலம் அடைந்தபோதிலும் அதிலும் வெற்றிபெறவில்லை. தேக ஆரோக்கியம் கெட்டுவிட்டது. இறுதியில் எல்லாவற்றையும் விட்டு விட்டு மனைவியுடன் யாத்திரை செய்தார். அப்படிப் போகும் போது நர்மதை நதிக்கரையில் யோகாப்பியாசத்தால் மூர்ச்சை அடைந்துவிட்டார். நாளடைவில் இந்த வியாதியும் கொஞ்சம் சௌகரியம் அடைந்தது. ஆனால் அடிக்கடி மூச்சு விடமுடியாமல் மாத்திரம் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தார். இதனுடையகஷ்டம் பொறுக்கமுடியாமலும் வியாதியை தீர்க்கமுடியாததினாலும் விக்ரதி அடைந்து, ஒரு நல்ல யோகியை அண்டினால் தான் தன் கஷ்டம் தீரும் என தீர்மானித்தார். 1911 வருஷம் தனிமையாக சஞ்சரித்துக்கொண்டிருக்கையில் ராஹூரியை சேர்ந்த யோகி குல்கர்னியை சந்தித்தார். அவர் இவரை ஸாயி பாபாவிடம் போகும்படி சொன்னார். ஆனால் இவர் ஸாயி பாபாவை முகம்மதியர் என்று நினைத்து அவரைப் பார்க்க இஷ்டம் இல்லாமல், நல்ல இந்து சன்னியாசியை தேடி அலைந்தார். இப்படி ராஹூரியில் தங்கி இருக்கும் போது ஒரு கிழவர் திடீரெனத் தோன்றி, "எப்பொழுதும் வென்னீரைக்

குடி. பச்சைத்தண்ணீரைக் குடிக்காதே". என்று புத்திமதி கூறினர். அப்படி வென்னீர் குடித்து வெகுசாய் ஆரோக்கியமடைந்தார்.

பிறகு நாராயண மஹாராஜ் என்பவரை சந்தித்தார். மறுபடியும் யோகி குல்கர்னியை சந்தித்தார். அவர் ஸாயி பாபாவை சந்திக்கும்படி வற்புறுத்தினர். இதைதட்டாமல் 1911ம் வருடம் ஜூன் மாதம் 27ம்தேதி உபாசனி மஹராஜ் சீரடிக்கு வந்து சேர்ந்தார். பாபாவைபார்த்தவுடன் இவரை தன்னிடம் தங்கும்படி பாபா செய்தார். உபாசனி மஹாராஜாவிற்கு இந்த மஹானை தரிசித்ததும் வியாதி பூர்ணமாய் தீர்ந்தது. ஒருநாள் தன்மனைவியைப் பார்க்க ஊருக்குபோகவேண்டுமென்று பாபாவிடம் உத்தரவு கேட்டார். பாபா முதல்தடவை உத்தரவு கொடுக்காததினால் மறுபடியும் உபாசனி மஹராஜ், பாபாவை மன்றாடிக் கேட்டதின் பேரில், பாபா, "நீ போய் எட்டு நாளில் திரும்பி வா" என்று சொன்னர். உபாசனி மஹராஜ் தான் எட்டு நாளில் திரும்பி வாமுடியாதென்று சொல்லிவிட்டு ஊருக்குபுறப்பட்டார். உபாசனி மஹராஜ் புறப்பட்டு, எங்கேயோ சுற்றி விட்டு தன் ஊர் செல்லாமல் 8 நாளில் பாபாவிடம் வந்து சேர்ந்தார். எல்லோரும் ஆச்சர்யம அடைந்தனர். உபாசனி மஹராஜுக்கும் அப்போது தான் பாபாவின் சக்தி தெரிந்தது. பாபா உபாசனியைப் பார்த்து, "உனக்கு நீ யாரென்று தெரியாது. எனக்கு தெரியும். நான் பல ஜன்மங்களாக உனக்குக் கடமைப்பட்டிருக்கிறேன். நீ இவ்விடத்திலேயே தங்கியிருந்து ஜன்ம லாபத்தை அடைவாய். இன்னும் நான்கு வருடத்தில் நல்ல பதவி கொடுக்கிறேன். நீ இந்த கண்டோபா கோவிலில் சும்மா உட்கார்ந்திரு. மிகுதியை நான் பார்த்துக்கொள்கிறேன் என்று சொன்னர்.

பாபாவின் கட்டளைப்படி கண்டோபா கோவிலில் உட்கார்ந்து கொண்டு எப்போதும் ஸாயி பாபாவை நினைத்துக்கொண்டே, சில சமயம் கீதை படித்துக்கொண்டிருப்பார். சில சமயம் ஜபம்செய்து கொண்டிருப்பார்.

ஜபம் செய்யும்போது சிறு கற்களை வைத்துக்கொண்டு, எவ்வளவு ஜபம் செய்கிறோம் என்பதை கணக்கு பார்த்துக்கொண்டிருப்பார். ஒரு சமயம் பாபா அவ்விடம் சென்று, கோபித்துக் கொண்டு, ஜபம் செய்யும்போது கணக்குப் பார்த்துக்கொண்டிருந்தால் உனக்கு கணக்குத்தான் நினைவில் இருக்கும். ஜபம் நினைவில் வராது. அதனால் அதை விட்டுவிடு என்று கற்களை உதைத் தெறிந்தார்.

ஒவ்வொரு தினமும் இவர் சமையல்செய்து பாபாவிடம் எடுத்துச் சென்று நைவேத்யம் செய்துவிட்டுத்தான் சாப்பிடுவார். ஒருநாள் சமையல் செய்துகொண்டிருக்கும்போது ஒரு கருப்பு நாய் வந்து பக்கத்தில் நின்றது.உபாசனி அதை துரத்திவிட்டார். பிறகு நைவேத்யத்தை பாபாவிடம் எடுத்துச்சென்றார். பாபா அதை பெற்றுக்கொள்ளவில்லை. நான் போஜனத்திற்கு உன்னிடம் வந்திருந்தேன். நீதான் என்னை துரத்திவிட்டாயே என்று சொன்னார். பாபாவை உபாசனி நீர் எப்பொழுது வந்தீர் என்று கேட்க, நான் அந்த கருப்பு நாயாக வந்திருந்தேன் என்று சொன்னார் அப்பொழுதுதான் உபாசனிக்கு பாபா நாயின் உருவாக வந்தார் என்று தெரிந்தது.

மற்றொரு முறை பாபா உபாஸினியிடம் பிச்சைக்காரன் மாதிரி வந்தார். உபாஸினி அதை தெரிந்துகொள்ளாமல் துரத்தி விட்டார். பிறகு பாபாவிடம் சென்றார். அவர் மிக கோபித்துக்கொண்டு "என்னை இன்றைக்கும் துரத்தினாய்," என்று கேட்டார். அது முதல் பாபா எந்த உருவிலும் வருவார் என்று தெரிந்துகொண்டார்.

உபாஸினியின் த்யான காலங்களில் இவருடைய பாப கர்மாக்களை ஒழிக்கிறதையும் சொப்பனத்தில் காண்பித்தார். பாபா இவரிடம் கொண்டிருந்த அன்பு காரணமாக இவருக்கு தன்னுடைய பூரண அனுக்ரகம் அளித்து அவரைதன்மயமாக்கி இவரை எல்லோரும் பூஜை செய்யும்படியான பாக்கியத்தை அளிக்க எண்ணினார்.

1913ம் வருடம் குரு பூர்ணிமா அன்று உபாஸினி மஹாராஜ் பாபாவின் உத்தரவின் பேரில் சந்த்ராபாய் பூஜை செய்ய ஆரம்பித்தனர். பாபாவின் அருள் இவருக்கு பரிபூர்ணமாக கிடைத்ததின் மகிமையால், ஒருமுறை இவர் பம்பாயிக்கு சென்றபொழுது, இவரை தரிசிக்க பல்லாயிரம் ஜனங்கள் வந்தனர். இப்படி சாதாரணமாக இருந்த ஒரு மனிதனை, ஒரு பெரிய மஹான் பதவிக்கு தன்மகிமையால் பாபா உயர்த்தி வைத்தார்.

சில வருடங்கள் கழித்து உபாஸனி சகோரி என்னும் இடத்தில் தனக்கு ஓர் ஆச்ரமம் அமைத்து பாபாவின் உத்தரவுப்படி இருந்து வந்தார். சகோரி என்னும் இடம் சீரடியல் இருந்து 3 மைல்தூரத்தில் உள்ள கிராமம். பாபாவின் கிருபையால் உபாஸினி மஹாராஜ் பல சக்தியும் பெற்ற பல இடங்களில் ஆச்ரமங்களும் ஏற்படுத்தி பாபாவின் ஈஸ்வராம்சத்தை பரவச்செய்ததும் அல்லாமல் வெகு ஜனங்களுக்கு நன்மையும் புரிந்து வந்தார். நரசிம்ம ஸ்வாமியை இழுத்து சீரடிக்கு சேர்த்து விட்டதால் அகில இந்தியாவிலும் பரவச்செய்யும் புண்ணியம் இவரைச்சேர்ந்தது.

இதனால் எல்லோரும் அறிந்து கொள்ளவேண்டியது ஸாயி பாபாவின் மகிமையும்: அளவிடாக் கருணையும் அவரை அண்டி பூஜிப்பதினால் நாம் எல்லாவித சௌகரியங்களையும் அடையலாம்.

இது வரையில் பாபாவை அண்டிவந்த சில முக்யமான பக்தர்களின் அநுபவங்களைப்பற்றி விரிவாக எடுத்துரைத்தோம். இதை படிப்பவர்களுக்கும், கேட்பவர்களுக்கும் பாபாவைப்பற்றி இன்னும் அதிகமாக அறிய அவா ஏற்படும் என்பதைப்பற்றி சந்தேகம் இல்லை. ஓர் மானிட உருவாய் வந்து பக்கிரியாய் இருந்து தன்னை வந்தடைந்த பக்தர்களுக்கு சகல செல்வமும், போகமும், மிக்க பெரு வாழ்வும். கருணை புரிகிறார் என்றால், அவரை உடனே தரிசித்து பாத சேவை செய்து அவருடைய கருணா சாகரத்தில் மூழ்க எவருக்குத்தான் அவா ஏற்படாது? இச்சம்பவங்களிலிருந்தே பாபா ஈஸ்வராம்சத்துடன் உலகில் மானிடராய் உதித்து மானிடப்

பிறவிகளுக்கு உதவி புரியவே அன்றி வேறு எதற்காகவும் அவ தரிக்கவில்லை என்பது தெள்ளனத் தெரிகின்றது. ஆகையினால் எல்லோரும் பாபாவின் பக்திக்கு ஈடுபட்டு சகல சௌகரியங்களும் அடைந்து அனுபவிப்பார்கள் என்று பூர்ணமாய் நம்புகிறோம்.

மேலே சொல்லிய பக்தர்களைப் போல் இன்னும் ஏராளமான பக்தர்களின் அநுபவங்களும் உண்டு. ஆனால் எல்லாவற்றையும் விவரமாக இச்சிறிய புஸ்தகத்தில் எழுத இயலாதலால் சுருக்க மாக சில பக்தர்களின் அனுபவங்களை பின்வருமாறு கூறுகிறோம்.

H. S. தீக்ஷித் M.L.A. : இவர் ப்ரக்யாதி பெற்ற பம்பாய் சொலி ஸிடர். ஹைகோர்ட்டிலும் சட்ட சபையிலும் அரசியல் விஷயங் களிலும் கீர்த்தி பெற்றவர். இவர் பாபாவின் தீவிர பக்தர்களில் ஒருவர். இவர் பாபாவை தெய்வமாக கொண்டாடி தம்முடைய சொத்துக்களை எல்லாம் அவரது என்று கொண்டு அவரிடத்தில் பக்தி செய்து கொண்டு வந்தார். பாபா எதற்காகதக்ஷிணை கேட் கிறார் என்னும் மர்மமும் இவருக்கு நன்கு தெரியும். இவரை பாபா அடிக்கடி தன் விமானத்தில் அழைத்துச் செல்கிறேனென்று சொல்வதுண்டு.

இவர் ஒரு தடவை தான் சுதேச ஸமஸ்தானத்தில் வேலை செய்து தான்சம்பாதித்த பெட்டி நிறைந்த வெள்ளி நாணயங்களை பாபாவின் முன்னிலையில் வைத்தார். பாபாவிடம் "இவையாவும் தங்களுடையது" என்று மனப்பூர்வமாக கூறினார், பாபாவும் "அப்படியா" என்று கூறி மூடியைத்திறந்து இரண்டு கைகளி னாலும் பணத்தை வாரி பக்கத்திலிருந்த எல்லா பக்தர்களுக்கும், வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தவர்களுக்கும் கொடுத்து விட்டார். சில நிமிடங்களில் பெட்டியும் காலியாகி விட்டது. தீக்ஷித் முகத் தைப்பார்க்க கொஞ்சமேனும் வருத்தமேனும் விசாரமாவது தென் படவில்லை. தான் கஷ்டப்பட்டு சம்பாதித்த பணம் இப்படி விரயமாகி விட்டதே என்பதைப்பற்றியும் இவர் மனதில் சிறிதளவு எண்ணங் கூட உதிக்கவில்லை. இதனால் பாபாவும் தீக்ஷித்தினுடைய

வைராக்கியத்தை சோதனை செய்து பலப்படுத்தினார். இவரிடம் பாபா ஒரு நாள் இவருக்கு வரப்போகும் ஜுரத்தைப்பற்றியும் எட்டு தினம் அஜ்ஜுரம் இருக்குமென்றும் அதைப்பற்றிக் கவலைப் படவேண்டாம் என்றும் முன்னதாகவே சொல்லி வைத்தார். பாபா சொல்லியபடி தீக்ஷித்திற்கு ஜுரம் வந்தது. அதைப்பற்றி அவர் கவலைப்படவில்லை. நண்பர்கள் வற்புறுத்திக் கொடுத்த மருந்தையும் குடிக்கவில்லை. வழக்கப்படி ஆகாரம் செய்து வந்தார். 8 நாட்கள் கழித்து உடம்பும் சுகமடைந்தது.

இவர் 5-7-1926 அன்று பம்பாயில் இருக்கும் தன் மூத்த மகனை பார்க்க புறப்பட்டார். இவர் கொஞ்சம் தாமதம் செய்து கிளம்பிய தால், ரயில் தப்பிவிடுமோ என்ற கவலையும் ரயிலில் முன்னதாகவே முதல் வகுப்பு இடம் ரிஸர்வ் செய்யவில்லையே இடம் கிடைக்குமோ கிடைக்காதோ என்ற யோசனையும் இல்லை. பாபாவின் கருணையில் பூர்ண நம்பிக்கை உள்ளவராதலால் நிதானமாக ஸ்டேஷனுக்கு வந்தார். ரயிலும் சிறிது தாமதித்து வந்தது. ஒருமுதல் வகுப்பு வண்டியும் காலியாக இருந்தது. அதில் இவர் ஏறிக்கொண்டு பாபாவின் அளவிலா அன்பையும் தாய் குணத்தையும் பற்றி புகழ்ந்து கொண்டு ஆனந்தத்தில் ஆழ்ந்தார். பிராணனும் நின்று விட்டது. இதனால் பாபா தான் முன்சொன்னபடியே அனாயாஸ முடிவை கொடுத்து தன்னிடம் சேர்த்துக் கொண்டார்.

G. S. கபர்டே B.A., L.L.B. : இவர் இந்தியாவின் சுயராஜ்யப் போராட்டக் கட்சியில் சேர்ந்தவர். இவர் தீவிரமாக பால கங்காதர திலகர், இன்னும் சிலபிரமுகர்களுடன் சேர்ந்த ஓர் தீவிர புரட்சி வீரர். ஆனபடியினால் இவரை அப்போதிருந்த ஆங்கில அரசாங்கத் தார் ஒரு சம்பவத்தில் சம்பந்தப்பட்டவர் என்று கைது செய்ய உத்தேசித்தார்கள். அத்தருணத்தில் கபர்டே பாபாவிடம் சென்று தஞ்சம் புகுந்தார். பாபா அவரை ஆறு மாதம் சீரடியிலேயே தங்கும் படி செய்து அவரை சிக்ஷையிலிருந்து காப்பாற்றினார். பாபா சொன்னதாவது" அந்த கவர்னரிடம் சண்டை போட்டு இவனை தப்புவிக்க வேண்டியிருந்தது இதிலிருந்து. கபர்டே பாபாவின் அன்பில் ஈடு

பட்டு அவரிடமே பக்தாராக இருந்து சகலவிதமான நன்மைகளையும் பெற்றார்.

M. W. பிரதான் Bar-at-Law: இவர் முக்யமான ஓர் பக்தர். இவர் பக்திக்கு மெச்சி பாபாவும் இவருக்கு ஸ்ரீராம மந்திரத்தை ("ஸ்ரீ ராம ஜயராம ஜய ஜய ராம") உபதேசித்தார்.

R. B. புரந்தரே:— இவர் பாபாவினுடைய தீவிர பக்தர். இவரும் இவரது சம்சாரமும் ஒருதடவை பாபாவை தரிசிக்க வந்தபொழுது மனதில் பண்டரிபுரம் போக வேண்டும் என்று நினைத்தார்கள். நினைத்த பிறகு திருப்பி பாபாவைப் பார்க்க பாபா காணாமல் அந்தஇடத்தில் பண்டரிநாதரைக் கண்டார்கள். மிகவும் சந்தோஷ மடைந்து நமஸ்கரித்து பாபாவே எல்லாம் என்ற உருதி அடைந்தார்கள்.

S. B. நாச்சனே:— இவருக்கும் இவரது குடும்பத்திற்கும் பாபாவின் அருளும் உதவியும் பூரணமாகக் கிடைத்தன. இவர் ஓர் சம்சாரி எல்லா குழந்தைகளுக்கும் பாபாவின் ஞாபகம் உண்டு ஒருநாள் ஒரு சிறு குழந்தை மாடியிலிருந்து கீழே விழுந்தது. பெரியவர்கள் வந்து பார்த்த பொழுது குழந்தைக்கு ஒருகாயமும் இல்லை. பாபா என்னை இரு கைகளினால் தாங்கிக்கொண்டு வந்து கீழே விட்டார் என்று சொல்ல பாபாவின் கருணையைப் பற்றி ஆனந்தம் அடைந்தார்கள்.

குஷாபாவ்:— இவர் ஒரு மந்திரவாதி கண் கட்டி ஜாலவித்தைகளில் பெயர் பெற்றவர். ஜனங்களை ஏமாற்றிக்கொண்டே பணம் சம்பாதித்து ஜீவித்து வந்தார். இவர் ஒருசமயம் பாபாவிடம் சொல்ல, பாபா "எண்டா இந்த திருட்டுவேலையெல்லாம்? ஒருவன் கடையிலிருக்கும் பேடாக்களை ஜால வித்தையினால் வரவழைத்து காண்பித்துக்கொண்டும் ஜனங்களுக்கும் காண்பித்து பணம் சம்பாதித்து ஜீவனம் செய்வானேன்? ஒழுங்கான மார்க்கத்தில் இருந்து செய்யக்கூடாதா" என்று கோபத்துடன் சொன்னார்.

மறுபடியும் தன்னிடம் கூப்பிட்டு, இன்றையே உன் திருட்டு வழிகளை எல்லாம் நிறுத்திவிடு. ஜீவனத்திற்கு வேண்டுமானல் நான் சொல்லும் மார்க்கத்தை நடத்தி வா- அதனுல் உனக்கு நன்மையும் உண்டு. ஜீவனமும் உண்டு. நீ எவருக்காவது வியாதியிருந்தால் அதைத் தீர்க்க பாபா என்று என்று என்னை நினைத்துக் கொண்டு கையை நீட்டி ஊதி (விபூதி) கேட்டால் உடனே உன் கையில் என் முன் இருக்கும் தூணியிலிருந்து (அக்னி குண்டம்) சுடச்சுட விபூதி வந்து விழும்படி செய்கிறேன். அதை நீ வியாதியஸ்தர்களுக்குக் கொடுத்தால், அவர்களுக்கு வியாதியும் உடனே தீர்ந்து விடும். அந்த சந்தோஷத்தினுல் அவர்களும் உனக்கு பணம் கொடுத்து ஆதரிப்பார்கள்" என்ருர். பாபாவின் உத்தரவின் படி குஷாபாவும் தன்னுடைய ஜால வித்தைகளை விட்டு விட்டு. பாபா சொல்லிக்கொடுத்த மார்க்கத்தை அனுஷ்டித்து வந்தார், அதனுல் அநேக ஜனங்களும் பிரயோஜனம் அடைந்தார்கள். குஷபாவும் தன் ஜீவனத்தில் பயனடைந்தார்.

புரொபஸர் ஸி. ஜி. நார்கே:—இவர் குழந்தை முதல் தாய் தகப்பனுடன் பாபாவிடம் அடிக்கடி செல்வதுண்டு. பாபாவிடம் பூர்ண பக்தியும் உண்டு. இவர் உயர்தரக் கல்வியில் தேர்ச்சி பெற்று M.Sc. (ஜியாலஜியில்) பரீக்ஷை பாஸ் செய்தார். இவர் படிப்க்கு தகுந்தபடி எங்கும் உத்தியோகம் கிடைக்க வசதி யில்லை. 1913ம் ஆண்டில் பாபாவிடம் சென்ற பொழுது இவரது தாயார் தனது மகனுக்கு உத்தியோகம் வேண்டும் என்பதை பாபாவிடம் கூறினுள். பாபாவும் கல்கத்தா, பம்பாய் ரங்கூன் என்று கூறி, ஒவ்வொரு ஊருடன் பூனு, பூனு என்று சொல்லக்கொண்டு வந்தார். ஆனல் பூனுவில் மாத்திரம் இவர் படிப்புக்கேற்ற உத்தியோகம் கிடையாது பாபா சொன்னபடி இவருக்கு பல வெளியூர்களில் ஆறு ஆறு மாதம் உத்தியோகம் இருந்து நின்று விட்டது. நான்கு வருடங்கள் இவ்வாறு கடந்த பிறகு பூனுவில் ஒரு கலாசாலை புதிதாக அரசாங்கத்தார் துவக்கினர். அந்தக்கல்லூரிக்காக இப்படிப்புள்ள உத்தியோகஸ்தர் தேவை என்ற விளம்பரம் செய்தனர். அந்த விளம்பரத்தை பார்த்தவுடன் பாபாவை இவர் உத்தரவு கேட்க நீ மனுப்

போடு உனக்குத்தான் கிடைக்கும் என்று பாபா கூறினர். இவருக்கும் அந்த உத்தியோகத்திற்காக சிபார்சு செய்யத்தக்க சிநேகிதர்களோ உறவினர்களோ கிடையாது ஆனுலும் பாபாவின் அருளினல் இவருக்கு அதே உத்தியோகம் கிடைத்தது. இதிலிருந்து பாபாவிற்கு நடக்கப்போகும் காரியங்கள் தெரிந்தது என்றும் அவர் திரிகால ஞானி என்றும் தெரிந்து கொள்ளுகிறோம்.

நாராயண ஆச்ரம்:—இவர் பம்பாயில் கஸ்டம்ஸ் குமாஸ்தாவாக இருந்தவர் இவர் ஒரு சன்னியாசி ஆஸ்ரமம் பெற்று அப்பியசித்து வந்தார் இவருக்கு "சர்வம் பிரும்மமென்னும் ஆனந்தம் எற்படாமலிருந்தது. இவர் அந்த ஆனந்தத்தை அடைய விரும்பி பாபாவினிடம் வந்துசேர்ந்தார். பாபாவின் எதிரிலே உட்கார்ந்து பாபாவின் கண்களைப் பார்த்ததும் இவருக்கு அந்த ஆனந்தம் உடனே ஏற்பட்டது. பாபாவின் ஈஸ்வரத் தன்மையும் கடாக்ஷத்தையும் அறிந்து கொண்டு ஆனந்தத்தையும் அடைந்தார்.

ராவ் பகதூர் S. B. துமால்: இவரும் பாபாவின் முக்கிய பக்தர்களுக்குள் ஒருவர். இவர் அடிக்கடி பாபாவை தரிசனம் செய்ய வருவது வழக்கம்.

1913ம் வருஷம் இவர் ஒரு ஆபரேஷன் செய்துகொள்ளும்படி நேர்ந்தது. அதற்கு பாபாவை அணுகி உத்திரவையும் அவரை தன் துணைக்கு வரும்படியும் அழைத்தார். பாபாவும் சம்மதித்தனர். ஆபரேஷன் தினம் வந்தது. பாபா வரவில்லை, அப்பொழுது ஒரு வயது முதிர்ந்த சன்யாசி ஒருவர் வந்தார். அவர் ஆபரேஷன் முடியும் வரை துமாலின் பக்கத்திலேயேயிருந்துவிட்டு பிறகு அவர் வீட்டில் இரவு சாப்பிட்டார். சாப்பிடும்பொழுது அவர்கள் வீட்டில் பகலில் செய்து மீதியிருந்த வெண்டைக்காய் கறியை தானே வாங்கி சாப்பிட்டார்.

சிறிது காலம் சென்ற பிறகு துமால் பாபாவிடம் வந்தார். பாபா வராததற்காக மிகவும் வருத்தப்பட்டார். பாபா அதற்கு தான் வந்ததாகவும், பிறகு இரவு போஜனம் செய்யும்பொழுது பகல் வெண்டைக்காய் கறியை கேட்டு வாங்கி சாப்பிட்டதாகவும் சொன்னார். பிறகு தான் துமாலுக்கு பாபா அந்த சன்யாசி உருவாக வந்தார் என்று தெரிந்தது.

இங்கே கவனிக்க வேண்டிய விஷயம் ஒன்று.

மேற்படி துமால் தன் அனுபவங்களைப்பற்றி சொல்லும்பொழுது அந்த சன்யாசி உருவாக வந்தவர் எங்கள் குருநாதன் ஸ்ரீ நரசிம்மஸ்வாமியைப் போல் இருந்ததாக சொல்லியிருக்கின்றனர். அப்பொழுது ஸ்வாமிஜி அவர்கள் கிரஹஸ்தாஸ்ரமத்தில் இருந்து கீர்த்தியாக வக்கீல் தொழில் நடத்தி வந்தார். இதிலிருந்து பாபா ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களை தன் பக்தியில் ஈடு பட்டு தனக்கு பிறகு ஸாயி பக்தியை எல்லோருக்கும் பரவச்செய்ய அவரே தகுந்தவர் என்றும் தீர்மானித்து இந்த சன்னியாசி ரூபமாகக் காண்பித்தார் என்றும் தெரிகிறது.

பாபா அடிக்கடி தான் எல்லா ஜீவராசிகளிடமும் இருப்பதாக சொல்லுவார். சந்தோர்க்கர் பூரண்போளி அனுபவம் ஒன்றாகும். பின்வரும் மற்றொரு உதாரணமும் கூறுவோம்.

ஒரு நாள் வழக்கம்போல் சாப்பிட்டுவிட்டு உட்கார்ந்திருக்கும் பொழுது, பாபாவின் பக்கத்தில் ஒரு கறுப்பு நாய் தன் வாலைக் குழைத்துக்கொண்டு வந்து நின்றது. அதற்கு மிகவும் பசியாய் இருப்பதை உணர்ந்த பாபா தன் பக்கத்திலிருந்த லக்ஷ்மி என்ற அம்மாளிடம், 'எனக்கு பசியாயிருக்கிறது. ரொட்டி கொண்டு வா' என்றார். அவள் கொண்டு வந்து கொடுத்தாள். அதை அவர் தன் பக்கத்திலிருந்த நாயினிடம் கொடுத்துவிட்டார். அவள் அதற்கு 'என்ன பாபா! பசிக்கிறது என்றீர்கள், நாயினிடம் ரொட்டியை கொடுத்து விட்டீர்களே' என்றாள். அதற்கு அவர் 'நானும் நாயும் ஒன்றுதான்' என்று சொல்லி எல்லா ஜீவராசிகள் உள்ளும் தான் இருப்பதை உணர்த்தினார்.

பாபாவிடம் பஞ்ச பூதங்களும் அவர் கட்டளைப்படி நடந்து கொண்டன. அதற்கு சரித்திர ஆரம்பத்திலே சொன்ன உதாரணம் ஒன்று. மற்றும் சிலவைகளைப் பற்றி கவனிப்போம.

கடுமையான வெய்யில் காலத்தில் சிலர் பாபாவுடன் அக்னி குண்டத்தின் எதிரில் உட்கார்ந்திருந்தனர். மிகவும் வியர்த்தது, உஷ்ணம் தாங்காமல் சிலர் வெளியே சென்றனர். பாபாவே தான் முக்கியம் என்று இருந்தவர்களை வெளியே போகவேண்டாம் என்று தடுத்தார். திடீரென்று உள் எங்கும் குளிர்ந்த காற்று ஜில் என்று வீசிற்று. உள்ளே இருப்பவர்களுக்கு சுகமாக இருந்தது. வெளியே வந்தவர்களோ வெய்யிலில் சிரமப்பட்டனர். பாபாவின் கருணையே கருணை! வாயு பகவான் பாபா சொன்னபடி திடீரென்று குளிர்ந்த காற்று அடிக்கும்படி செய்தார்.

ஒரு பக்தர் சீரடி வந்து விட்டு திரும்ப கோர்பர்கான் செல்ல வேண்டியிருந்தது. அன்று வானம் மிக கனத்த மேகங்களுடன் எப்பொழுது மழை பொழியுமோ என்று பயப்படும்படி இருந்தது.

சில நிமிஷங்களில் மழை பெய்யும் என்றே எல்லோரும் அபிப்பிராயப்பட்டனர். பாபா அந்த பக்தரிடம் 'நீ கோபர்கானுக்கு போ, பிறகு தான் மழை பெய்யும்' என்றார். அவர் சொன்னபடியே மேகங்கள் திடீரென்று கலைந்தன. இரண்டு மணி நேரம் கழித்து தான் மழை பெய்தது. தன் பக்தன் மழையினால் கஷ்டப்படக் கூடாது என்று, மழை சிறிது நேரம் நிதானித்து பெய்யும்படி செய்தார்.

பாபாவிற்கு ஜாதி மத பேதம் கிடையாது. கடும் வியாதியஸ்தர்கள் வந்தாலும் வரவேற்பார். பல குஷ்டரோகிகளுக்கு உதவி புரிந்திருக்கிறார். பணக்காரனாலும், ஏழையானாலும் அவரிடம் ஒரே மாதிரியான வரவேற்புதான் கிடைக்கும். தன் கௌரவத்தை அவர் பார்ப்பதே கிடையாது, ஒரு சமயம் துகாராம் என்ற சக்கிலி அவரிடம் வந்தான். சில நாட்கள் தங்கினான். அவனுக்கு சரியான பிழைப்பு கிடைக்கவில்லை. அவன் பாபாவிடம் தனக்கு ஊரை விட்டு போவதற்கு விடை தருமாறு கேட்டான், பாபா அவனை அங்கேயே தங்குமாறு சொன்னார். அவன் பிடிவாதமாக கிளம்பவே பாபா அவனிடம் சென்று அவனைக் கட்டி அணைத்து "போகாதே அண்ணே" என்றார். இதிலிருந்தே பாபாவின் உயரிய குணம் வெளியாகிறது.

இதைப் போல பல பக்தர்கள் அனுபவங்கள் உண்டாயினும் எல்லாவற்றையும் இச்சிறு புஸ்தகத்தில் எழுத முடியவில்லை.

மேற் சொன்ன பக்தர்கள் எல்லாம் பாபாவுடன் நேரிடையாக பழகியவர்கள். நம்மில் அநேகருக்கு அந்த பாக்கியம் கிடைக்கவில்லை. ஆயினும் பாபாவின் ஸமாதிக்கு பிறகும் பல பக்தர்களுக்கு நிறைந்த அனுபவங்கள் உண்டாகியிருக்கின்றன. அவைகளைப் பற்றியும் இங்கே கூறுவோம்.

அவைகளில் முதன்மையாக சொல்லவேண்டியது எங்கள் குருநாதன் ஸ்ரீ நரசிம்ம ஸ்வாமிஜி அவர்களே. பல அரிய அனுபவங்களுக்கு பிறகு அவர் அகில இந்திய ஸாயி ஸமாஜம் என்ற ஒரு குழு நிறுவி இன்று ஒரு கோயிலும் கட்டி யிருக்கிறார்.

இவருடைய தீவிர பிரசாரத்தின் பயனுய்த்தான் தென்னிந்தி யாவிலும் மற்றும் எல்லா பாகத்திலும் ஸாயி பாபா பக்தி ஏற்பட்டது. அந்த பக்தியினுல் பலருக்கு கைகண்ட பலனும் கிடைத்தது.

அவைகளில் சிலவற்றை கீழே கூறுவோம். கும்பகோணத்தில் இருக்கும் ஸ்ரீ மணி அய்யர் என்பவருடைய பெண் ராஜலக்ஷ்மி என்பவள் பிறவியிலேயே ஊமை. அவளுக்கு சுமார் 8 வயதாகி இருக்கும்போது ஸ்ரீ ஸ்வாமிஜியிடம் வந்து அதற்கு ஏதாவது நிவாரணம் செய்து தரும்படி பிரார்த்தனை செய்தார். ஸ்வாமிஜி சொல்படி சீரடிக்கு சென்று ஸாயி பாபாவின் ஸமாதியை தரிசனம் செய்தார். அங்கே இருந்த அப்துல் பாபா என்பவர், "பாபா பாபா போலோ" என்று குழந்தை ராஜலக்ஷ்மியிடம் சொன்னுர். உடனே ஸமாதிக்கு எதிராக பாபா, பாபா என்று சொல்ல ஆரம்பித்தாள். பிறகு படிப்படியாக பேச்சு வந்தது. இப்பொழுது நன்ருகபேசிக் கொண்டு சௌக்கியமாய் இருக்கிருள்.

மடியில் நிறைய சில்லரையை வைத்துக்கொண்டு ஹோட்டலி லிருந்து வீட்டிற்கு கிளம்பினுர். வேஷ்டி அவிழ்ந்து மடியிலிருந்து சில்லரை எல்லாம் கீழே விழுந்து சிதறின. எல்லாம் ஒரே இருட்டாக இருந்தது. பணம் விழுந்த இடம் தெரியவில்லை. பாபாவை உருக்கமாக பிரார்த்தனை செய்தார். திடீரென்று பளிச்சென்று ஒரு வெளிச்சம் உண்டாயிற்று. இவர் குனிந்து எல்லா சில்லரைகளையும் எடுத்துக்கொண்டார். உடனே வெளிச்சம் அகன்று மறுபடியும் இருள் சூழ்ந்துகொண்டது.

மதருஸில் பாப்பையா செட்டியார் என்பவருடைய சம்ஸார மான குட்டியம்மா (அம்முடு அம்மா) என்பவர் சிறந்த ஸாயி பக்தர். அவர் ஒரு சமயம் மிகவும் நோய்வாய்ப்பட்டிருந்தார். ஸ்வாமிஜி அவர்கள் அப்பொழுது ஸாயி பாபாவைப்பற்றி தீவிர பிரசாரம் செய்து வந்த சமயம். அவர் தினந்தோறும் ஸாயிபாபாவின் படத்தை கையில் வைத்துக்கொண்டு மதருஸின் பல பாகங்களுக்கும் சென்று, ஸாயியின் மஹிமையை பற்றிய சொற்பொழிவும் பூஜை செய்யும் விதங்களும், அவரைப்பற்றிய பக்தி பஜனையையும் செய்வது வழக்கம் (1940-வருஷம் முதல் 1942-வருஷம் வரை). அவ்வாறு ஒரு

நாள் செய்யும்பொழுது மேற்சொன்ன குட்டியம்மாளிற்கு உடம்பு சுக மில்லை என்று தெரிந்தவுடன், " அவர் பஜனையின் மத்தியில் ' நாம் சிறிது நேரம் த்யானம் செய்வோம். அந்த த்யானத்தில் குட்டி அம்மா கட்டிலில் படுத்து இருப்பது போலவும் ஸாயிபாபா பக்கத்தில் நின்று உடம்பு முழுவதும் தடவிக்கொடுத்து வியாதியை போக் கடித்து விடுவது போலவும் மனதில் நினைத்துக் கொள்வோம், அந்த அம்மாளுக்கு கூடிய சீக்கிரம் உடம்பு நன்றாக குணம் ஆக பாபா அருள் புரியும்படி வேண்டிக் கொள்வோம்" என்றார். அதன்படி பஜனை கோஷ்டியாராகிய நாங்களும் பிரார்த்தனை செய்தோம். பாதி தியானத்தில் திடீரென்று கடிகாரத்தில் 8-மணி அடித்தது. உடனே ஸ்வாமிஜி " மணி அடித்து விட்டது. பாபா அருள் புரிந்து விட்டார் சந்தேகமில்லை" என்றார், பஜனை முடிந்து அவர் வீட்டிற்கு, (பாப்பையா செட்டியார்") ஸ்வாமிஜிக்கு டெலிபோன் செய்தார். அம்மாளுக்கு திடீரென்று 8-மணிக்கு வாந்தி எடுத்ததாகவும் அந்த அதற்கு பிறகு உடம்பு சுமாராக இருப்பதாகவும் சொன்னார். பிறகு அந்த அம்மாவிற்கு படிப்படியாக உடம்பு நன்றாக சௌக்கிய மாகிவிட்டது. என்ன பாபாவின் கருணை ! தன் பக்தர்களின் வேண்டுகோளுக்கு இணங்கி அந்த அம்மாவிற்கு உடம்பு சௌக்கிய மாக்கிவிட்டார்.

இந்த இடத்தில் மற்றொரு முக்கியமான விஷயம். கூட்டுப் பிரார்த்தனையில் கடவுளுக்கு மிகவும் இஷ்டம் என்றும் தெரிந்து கொள்கிறோம். எல்லோரும் அப்படியே செய்து நன்மை அடை வோமாக.

கோயம்புத்தூரைச் சேர்ந்த கேப்டன் தேவராஜ் என்பவர் பாபா பக்தர் போன உலக மகா போரில் கலந்துகொண்டு அவர் மத்யதரைக் கடலில் கப்பலில் உத்தியோகத்தில் இருந்தார். எதிரி விமானங்கள் குண்டுமாரிகள் பொழிந்து அந்த கப்பலை கடலுக்குள் அமிழ்த்தி விட்டனர். அவர் பாபாவை பிரார்த்தனை செய்தார். பாபாவின் அருளால் அவர் எப்படியோ பிழைத்து விட்டார். இப்பொழுது அவர் கோயம்புத்தூரில் இருக்கிறார்.

ஸ்வாமிஜியின் பிரயாசையால் கோயம்புத்தூரில் பாபாவின் பக்தி பரவி வந்தது. அங்கே ஒருநாள் பாபா படத்திற்கு புஷ்ப அர்ச்சனை செய்து கொண்டிருக்கும்பொழுது திடீரென்று ஒரு நாகப்பாம்பு வந்து படத்தின் பக்கத்தில் வந்து நின்றது. அர்ச்சனை முடிந்தவுடன் சென்று விட்டது. மறுநாள் அவர்கள் நிறைய புஷ்பங்கள் வாங்கிவைத்துக்கொண்டு அர்ச்சனை செய்ய ஆரம்பித்தார்கள். மறுபடியும் பாம்பு வந்தது. அவர்கள் பாபா படத்திற்கும் பாம்பிற்கும் அர்ச்சனை செய்தார். பாம்பு அர்ச்சனை முடியும் வரை தன்னுடைய படம் தூக்கியபடியே நின்றிருந்தது. அர்ச்சனை முடிந்ததும் அங்கே வைத்திருந்த பாலை குடித்து சென்று விட்டது. இப்படி பல நாட்கள் நடந்து வந்தன. அங்கு உள்ளவர்கள் நாக ஸாயி மந்திர் என்ற ஒரு கட்டிடம் கட்டி அதில் பூஜைகள் முதலியவை செய்து வருகிறார்கள், நாகப் பாம்பின் புற்றும் பூஜிக்கப் பட்டு வருகிறது. அவர்கள் ஸாயி கன்யா வித்யாசலா என்ற ஒரு பெண் பள்ளிக்கூடம் ஆரம்பித்து எல்லாம் அமோகமமாக நடந்து பாபா பக்தி மேலோங்கி நிற்கிறது.

பாபா ஸமாதி ஆனபிறகு ஒரு சமயம் ஸ்ரீமதி போதிய வாரி என்ற அம்மையார் சீரடிக்கு வந்துவிட்டு திரும்பினார். ரயிலில் ஏறும்பொழுது கால் தவறிவிட்டது. திடீரென்று ரயில் வண்டிக்கும் பிளாட்பாரம் சுவருக்கும் மத்தியில் விழுந்துவிட்டார். எல்லோரும் பயந்து அந்த அம்மா ரயிலில் அறைபட்டு இறந்திருப்பார். அல்லது ரொம்ப அடிபட்டிருக்கும் என்று நினைத்தார்கள். ரயில் நிறுத்திவிட்டு பார்த்தால் அந்த அம்மையாருக்கு உடம்பில் ஒரு விதமான காயமும் இல்லை. எல்லோருக்கும் ஓரே ஆச்சரியமாகி விட்டது. அவளை விசாரித்ததில் பாபா தன் சூக்ஷ்ம சரீரத்தில் அவளை தாங்கி பிளாட்பாரம் சுவரோடு அணைத்து வைத்திருந்ததாகும். ரயில்வே வண்டி தன்மேல் உராயவே இல்லை என்றும் சொன்னார். என்ன ஆச்சரியம்! தன் பக்தர்களுக்கு ஆபத்து வாராமலிருக்க எவ்வளவு வித வழிகளில் ஒத்தாசை செய்கிறார்.

சீரடியைப்பற்றிய இன்னும் சில விஷயங்களைச் சொல்லுவோம். பாபாவின் ஸமாதியில் மூன்று படிகள் இருக்கின்றன. அந்த படிகளை மிதிப்பவன் எல்லா வியாதிகளும் நிவாரணமாகி சௌக்கிய

மாயிருப்பான் என்பது எண்ணற்ற மக்களின் நம்பிக்கை பாபாவும் அடிக்கடி சொல்லி யிருக்கின்றார். அதற்கு எதிரில் விசாலமான ஹால் இருக்கின்றது. அங்கு தான் தினந்தோறும் பூஜை, பஜனை, காலக்ஷேபம் முதலியவைகள் நடந்து வருகின்றன. யார் வேண்டு மானாலும், எப்பொழுது வேண்டுமானாலும் அங்கே போகலாம். வியாழக்கிழமை தோறும் பல்லாயிரக் கணக்கான மக்கள் அங்கு சென்றுதரிசனம் செய்கிறார்கள்.

பாபாவை பக்தர்கள் எல்லாம் கூடி, "உங்களுக்கு ஒரு உத்ஸவம் கொண்டாட வேண்டுமாம்" என்று கேட்டார்கள். முதலில் மறுத் தாலும், பிறகு ஸ்ரீ ராம நவமி உத்ஸவம் கொண்டாட அனுமதி கொடுத்தார். 1911ம் வருஷம் முதல் இது கொண்டாடப்படுகிறது. பாபா இருக்கும் வரையில் அவரை ஊர்வலமாக கூட்டிச் செல்வது வழக்கம். குடை, சாமரம் முதலியவைகளோடும், வாத்தியங் களோடும் செல்வது வழக்கம். அந்த உத்ஸவத்திற்கு பல மக்கள் திரளாக வெளியூர்களிலிருந்து வருவார்கள். பஜனைகள், கால க்ஷேபங்கள் முதலியவைகளும் நடைபெறும்.

அவர் ஸமாதிக்கு பிறகு அவர் படத்தை வைத்து ஊர்வலமாக வருகிறார்கள். இப்பொழுதும் அதை மிக விமரிசையாக கொண்டாடு கிறார்கள்.

பாபாவிடம் சாமகர்ண என்று ஒரு குதிரை இருந்தது. அது பாபாவிற்கு கீழே விழுந்து மனிதர் மாதிரி நமஸ்காரம் செய்யும்.

பாபா லெண்டி தோட்டம் என்று ஒரு தோட்டம் ஏற்படுத்தினார். அதில் பலவித பூச் செடிகளும், மரங்களும் வைத்து தன் கையா லேயே தண்ணீர் ஊற்றி வளர்த்தார். அந்த தோட்டத்தில் ஒரு அகண்ட தீபம் ஏற்றி வைத்து அது எப்பொழுதும் எரிந்து கொண்டே இருக்க ஏற்பாடு செய்தார். இப்பொழுதும் அது எரிந்து கொண்டிருக்கிறது. மசூதியில் ஒரு துளசிச்செடியும் வைத்து வளர்த்து வந்தார்.

தோட்டத்தின் மத்தியில் ஒரு சிறியகல்லின் மேல் உட்கார்ந்து நான்கு பக்கங்களிலும் தன் வீக்ஷிண்யம் செலுத்துவார். தன் பக்தர் கள் எங்கு கஷ்டப்பட்டாலும் அதைப் போக்கவே தான் அப்படி நாற்புறமும் பார்ப்பதாக அவர் அடிக்கடி சொல்லுவார். இப்படி ஒரு நாள் அவர் உட்கார்ந்திருக்கும் பொழுது சாந்தி என்ற சிறுமி தவறி கிணற்றில் விழுந்து விட்டாள். பின்னுலேயே வந்துகொண்டிருந்த அதன் பெற்ருேர்கள் பதறிப்போய் குழந்தையை கிணற்றிலிருந்து எடுத்தார்கள். குழந்தை சிரித்துக்கொண்டு ஒரு கல்லேப் பிடித்து கொண்டிருந்தது. அதற்கு அடியும் இல்லே, அதிர்ச்சியும் இல்லே. பாபா தன்னே கையில் தாங்கி மெதுவாக ஜலத்தில் விட்டதாக குழந்தை சொல்லிற்று. தருணம் அறிந்து சிறுமியை ஆபத்தி லிருந்து பாபா காப்பாற்றினுர்.

பாபாவுடன் கூடவே பல வருஷங்கள் வாழ்ந்து வந்த அப்துல் என்பவர் பாபாவிற்கு சகல பணிவிடையும் செய்துவந்தார். அவர் இப்பொழுது சுமார் 4 வருஷங்கள் முன்பு தான் காலமானுர்.

பாபா மசூதியில் அக்னி குண்டத்தில் தினம் அன்ன ஆஹுதி செய்வதற்கு நானக் (S. M. Naik) என்பவருக்கு பாபா அனுமதி கொடுத்திருந்தார். இப்பொழுதும் அந்த பணியை அவர் செய்து வருகிருர்.

இப்பொழுது நாம் ஸ்வாமிஜி ஏற்படுத்தியிருக்கும் ஸாயி ஸமா ஜத்தைப்பற்றி கூறுவோம்.

இதிலிருக்கும் ஸமாதி சீரடியிலிருக்கும் ஸமாதியைப் போல் சலவைக் கல்லாலேயே செய்யப்பட்டிருக்கிறது. இதற்கு பக்கத்தில் புத்தகாலயமும், இலவச ஆஸ்பத்திரியும் உள்ளன. இந்த கோயில் கும்பாபிஷேகம் சுமார் 3 வருஷத்திற்கு முன் விமரிசையாக நடந்தது.

இந்தக் கோயிலே கண்டு தரிசிக்க மைசூர் மகாராஜா வந்திருந் தார். இன்னும் பல பிரமுகர்களும் வருகிருர்கள்.

எல்லோரும் பாபாவை மேன்மேலும் வழிபட்டு இம்மைக்கும் மறுமைக்கும் வேண்டிய சௌகரியங்களே அடைந்து சௌக்கியமாக வாழுமாறு பாபாவை பிரார்த்திக்கிறேம்.

# பிழை திருத்தம்.

| பக்கம் | வரி | பிழை | வாசிக்கவேண்டியது. |
|---|---|---|---|
| 6 | 11 | காண்மித்துங் | காண்பித்துக் |
| 6 | 28 | பதிஞேன்ருயிர | பதிஞென்று ஆயிர |
| 9 | 16 | எனன்றும் | னென்னும் |
| 11 | 15 | எல்லோரையும் | எல்லோரிடத்தும் |
| 16 | 7 | சிலநாள்கழித்து ஞர்கள். | |
| 20 | 2 | பிராமணன் | பிராணன் |
| 23 | 2 | நீரை | |
| 25 | 8 | குஞனு | ருஞனு |
| 28 | 8 | முண்டு | முண்டோ |
| 31 | 26 | பிரசாதமாரக | பிரசாதமாக |
| 31 | 28 | நாஞ | நாஞ |
| 40 | 7 | நாஞ | நாஞ |
| 40 | 9 | நாஞ | நாஞ |
| 40 | 13 | நாஞ | நாஞ |
| 40 | 16 | விட்டு விட்டு | விட்டு விடு |
| 40 | 18 | நஷ்டங்கள் | கஷ்டங்கள் |
| 54 | 27 | தாரும் ரயில்வே— | தாகவும்—ரயில் |
| 55 | 9 | வேண்டுமாம் | வேண்டும் |
| 55 | 17 | நானக் | நாயக் |

Number of Copys—500—dated 10-9-1956.